Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 5-6-1948 சனிக்கிழமை மலர் 39.

# சிறு கதைப் போட்டிப் பரிசு. ரூ. 200.

## நோக்கம்.

1. திராவிட இன எழுச்சிக்குரியதாய், சுயமரியாதை அடிப்படையில் தமிழில் எழுதப்படும் சிறு கதைகள் பெருகவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்போட்டிப் பரிசு தொடங்கப்பட்டிருக்கிறது.

## பரிசு அளிக்கும் முறை.

2. பரிசுத் தொகை ரூ. 200யும் நான்காகப் பிரிக்கப்பட்டு, ஒரு பரிசு ரூ. 50 வீதம் நான்கு பரிசுகள் பருவத்திற்கு ஒன்றாக அளிக்கப்படும்.

3. மூன்று மாதம் ஒரு பருவம் என்று கருதப்படும்.

4. பரிசு, வாக்காளர்களின் முடிவுப்படி அளிக்கப்படும்.

5. வாரம் ஒன்றாக வெளியிடப்படும் சிறு கதைகள், மூன்று மாதத்திற்கு 13 ஆகியவுடன் அந்த 13ம் போட்டிக் குரியதாய் எடுத்துக்கொள்ளப்பட்டு, 13வது இதழின் எண்ணிக்கைப்படி அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டுகளைச் சந்தாதாரர்களுக்கும் ஏஜண்டுகளுக்கும் அனுப்பப்படும்.

அ. பிறகு குறிப்பிடப்படும் நாளில் வந்து சேரும் வாக்குச்சீட்டுகளைக் கொண்டு எந்தக் கதை பரிசுக்குரியதென்று தேர்ந்தெடுக்கப்பட்டுபரிசு அளிக்கப்படும்.

## நிபந்தனை.

6. இப்போட்டியில் எவர் வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம்.

7. கதைகள் அனுப்புவோர் "சிறு கதைப் போட்டிக்கு" என்று தலைப்பில் எழுதவேண்டும்.

8. "குடி அரசு" அளவில் 4 கலத்திற்கு மேற்பட்டதாக இருத்தல் கூடாது.

9. எழுதுவோர் தாளின் ஒரு பக்கத்தைத்தான் பயன்படுத்தவேண்டும்.

10. வெளியிடுவதும், வெளியிடாததும் ஆசிரியரின் பொறுப்பு.

11. வெளியிடப்படாத கதைகளைத் திரும்பவேண்டுவோர் போதுமான தபால் பில்லைகள் அனுப்பி வைக்கவேண்டும்.

12. கதைகளை வெளியிடும்போது எழுதியவரின் பெயர் கொடுக்கப்படாமல், பருவமும் எண்ணிக்கையும் கொடுக்கப்பட்டாலும், பரிசுக்குரியவரைத் தேர்ந்தெடுத்த பிறகு எண்ணிக்கையும் பெயரும் வெளியிடப்படும். போட்டியாளர் தன் பெயரோடு புனைபெயர் தந்திருந்தால் புனைபெயரே வெளியிடப்படும்.

13. ஒருவரின் கதை ஒரு பருவத்திற்கு ஒரு முறைதான் வெளியிடப்படும்.

14. வெளியிடப்பட்ட கதைகளின் வெளியீட்டுரிமையும், பதிப்புரையும் குடி அரசுக்கே உரியது.

15. இப்போட்டியில் எவ்வழியிலேனும் தகராறு ஏற்படுமானால், ஆசிரியரின் முடிவே முடிந்த முடிவாகும்.

குறிப்பு:—12—5—48ம் நாள் குடி அரசுக்கே கதைகள் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆசிரியர், "குடி அரசு" ஈரோடு.

க. சண்
போத்த
வேலூர்-சேலம்

பெண்கள் பகுதி:

# திராவிட விதவைத் தோழியர் நிலை.

"தோழியர் டி. மங்கையர்க்கரசி"

★

நமது இனத்தின் இளம் விதவைகளின் நிலையை எண்ணிப் பார்க்கும், இனப்பற்றுள்ள ஒவ்வொரு தோழியர்களும் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது. நமது பெண்கள் எந்தத்துறையிலுமே முன்னேற்றமடையாமல் இருப்பதால்தான், நமது இனத்தின் இளம் விதவைகளான பெண்கள், கொஞ்சம் நகை போட்டுக் கொண்டு, நல்ல உடையாக உடுத்திக்கொண்டு, கொஞ்சம் நாகரீகமாக இருந்தால், நாம் பொறுப்பதில்லை. அவர்களை ஏளனமாகத் திட்டித் தூஷிக்கும் நிலையிலே இருக்கிறோம்.

ஆனால் விதவைகள் இன்னின்ன முறைகளில்தான் இருக்கவேண்டும் என்ற சம்பிரதாயத்தைத் தோற்றுவித்த ஆரியப்பெண்களின் நிலைமையைப் பாருங்கள்! 60 வயதில் விதவையான பார்ப்பனப் பெண்டிர்கள்கூட தங்களின் நகைகளைக் கழட்டுவதில்லை. சாதி சம்பிரதாயப்படி மொட்டையும் அடிப்பதில்லை. மஞ்சள் பூசிக் கொள்வதை மட்டும் நிறுத்தி விட்டு, பிறகு எந்தச் சம்பிரதாயத்துக்குமே தலை வணங்குவதில்லை. அதைப்பற்றி எந்தப் பார்ப்பனப் பெண்டிருமே தூஷிப்பதில்லை. உலகமே முன்னேறிவரும்போது, நாம் மட்டும் ஏன் பின்னேறிவர வேண்டும்? என்று சிந்தித்தே தங்கள் இனத்தின் விதவைப் பெண்டிர்களை மொட்டையடிக்கும் வழக்கத்தையும் ஓரளவு நிறுத்தி வருகிறார்கள். மற்றும், ஆரிய விதவை ஒருத்திக்கு ஏதேனும் ஒரு ஆபத்து என்றால், எல்லா ஆரியப் பெண்களுமே கூடி அவளை மீட்டு விடுகிறார்கள். ஆனால், நம் திராவிட விதவைப் பெண் யாரேனும் ஒருத்தி வாழ்க்கையில் வழி தவறி விட்டால் போதும்! அவளை, ஒரு திராவிடப் பெண்கூட ஆதரிக்கமாட்டாள். அவளை வீட்டை விட்டுத் துரத்தியோ, சாதிப்பிரஷ்டம் செய்தோ, அவள் மேலும் கெட இடம் கொடுத்து வாழ்க்கையைப் பாழாக்கி விடுகிறோம். என் இந்த நிலை? அவளை அந்த நிலையில் ஆக்கிய சமூகத்தைக் குறைகூறாமல்,—அந்தத் துருப்பிடித்த சமூகத்திற்கே நாம் இன்னமும் தலை வணங்கிக் கொண்டிருக்கும்போது, அவளை மட்டும் நாம் ஏன் ஒதுக்கிக் கெடுக்கவேண்டும்? ஆரியப் பெண்கள் எவ்வளவு கட்டுப்பாடாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்த பிறகாவது நமக்குள் ஒற்றுமையை உண்டாக்கி கொள்ள முயற்சிக்கக்கூடாதா?

மற்றும் விதவையான நமது தோழியர்களின், நிலைமையை கவனித்துக் கொள்வது பெற்றோர், இல்லாவிடில் அண்ணன் தம்பிமார்கள்தான்! சுதந்தரமாக இருக்கவேண்டுமென்று நினைத்தால், சமூகம் இடம் கொடுப்பதில்லை. இளம்பெண் தனிமையில் இருந்தால் கெட்டுப்போய் விடுவாள் என்று சமூகம் மிரட்டும். இதற்கு பயந்து கொண்டு அவள் அண்ணன் தம்பிமார்கள் வீட்டில்தான் இருக்கவேண்டும் என்ற நியதிக்குக் கட்டுப்பட்டு காலங்கழிக்கவேண்டும். அண்ணியின் மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் அடிபணிந்து அடிமைவாழ்வு வாழவேண்டும். என்றைக்காவது பொறுமையையிழந்து விட்டால் போதும்! அண்ணியின் வசைமாரிகளும் அண்ணனின் கண்டிப்பும் தலைக்குமேலே போய்விடும்! இதற்குப்பயந்து விதவைகள் வீட்டு வேலைகள் செய்து கொண்டு ஊமையாகக் காலங்கழிக்கவேண்டும். இது வேண்டுமென்று எழுதியது அல்ல! உண்மையில், இப்படி எத்தனையோ இல்லங்களில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. தன் வயதினளான அண்ணியும், ஏனையபெண்களும், தங்களை எவ்வளவோ சிங்காரித்துக்கொண்டு உல்லாசமாக இருக்கும்போது, இவள் மட்டும் அவளது நிறைவேறாத ஆசைகள்! முற்றுப்பெறாத வாழ்க்கைக்கனவுகள், எல்லாவற்றையும் நிர்மூலமாக்கிய சமூகத்தை நினைந்து கண்ணீர் விட்டு ஆறுதலடைய வேண்டும்.

என்ன பயங்கரமான நியதி? 56 வயதுள்ள அம்பேத்கார், மறுமணம் செய்துகொள்ள உரிமை கொடுக்கும் சமூகம், 20 வயதுள்ள மல்லிகா மறுமணம் செய்து கொள்வதை மட்டும் ஏன் கேவலமாக மதிக்கிறது? ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி ஆக்கியதாலல்லவா? ஒவ்வொரு இளம் விதவைகளும் பிறர் தயவை நாடி அடிமையாய் இருக்கவேண்டியிருக்கிறது. இதைப்பற்றி எந்தத் தோழியராவது சிந்தித்தால் அவர்கள் நெஞ்சு வேகவில்லையா? மாதர் மறுமணம் வேண்டும் என்று சட்டம் செய்தால் மட்டும் பெண்ணடிமை போகாது. மறுமணம் செய்துகொள்ள இஷ்டமில்லாதவளாயின், அவள் அடிமையாயிருந்துதான் ஆகவேண்டும். அந்த நிலை ஒழிய, பெற்றோர் ஆண்களை எப்படிப் படிக்கவைத்து, அவர்கள் வாழ்க்கைக்குப் போதுமான ஊதியம் கிடைக்க, உத்தியோகத் துறையில் இறக்கிவிடுகிறார்களோ, அதேபோல் பெண்களுக்குப் படிக்கவும், உத்தியோகம் பெறவும் வசதி அளிக்கும்படி முதலில் சட்டம் செய்ய வேண்டும்!

விதவைகள் என்றால் உணர்ச்சி அற்ற மரக்கட்டைகளா? அவர்களும் நம்மைப்போல் பெண்கள் தானே? அவர்கள் நகைபோட்டுக் கொண்டாலோ, நல்ல துணி உடுத்திக்கொண்டாலோ, கேவலமாக மதித்துத் தூற்றும் தோழியர்கள் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். தங்கள் கணவன்மார் என்னதான் ஏழையாயிருந்தாலும், எத்தனை தோழியர்கள் நகைக்கும் துணிக்குமாகத் தன் கணவனைப் பாடாகப்படுத்தி—கடன் பட்டாவது, நகையுந் துணியும் வாங்கிக் கொடுக்கச்சொல்லி அணிந்து மகிழ்கிறீர்கள்? விதவைத் தோழியர்களுக்கு மட்டும் ஆசை இருக்காதா என்பதைப்பற்றி ஏன்சிந்திக்கமறந்து விடுகிறீர்கள்? ஒரு சமயம் அவர்கள் விதவைகளான அன்றே அவர்களது உணர்ச்சியும் அடங்கி

(தொடர்ச்சி 16-ம் பக்கம்)

# கண்ணை மூடிப் பின்பற்றுங்கள்!

## கருப்புச் சட்டையை எங்கும் பரப்புங்கள்!

## பெரியாரவர்களின் தலைமை முடிவுரை.

★

(சென்ற வாரத்தொடர்ச்சி)

### புத்திசாலிகளே! புத்தியாய்ப் பிழையுங்கள்!

பார்ப்பனத் தோழர்களே! எங்களை முட்டாள்களென்று கூறி உங்களைப் புத்திசாலிகள் என்று பெருமையடித்துக்கொள்கிறீர்கள்! ஆணவப்பட்டு அழிந்து போகாதீர்கள்! புத்திசாலிகளானால் புத்திசாலிகளாகவே பிழைத்துக் கொள்ளுங்கள்! உங்களவரே இந்தியா முதன் மந்திரியாயிருப்பது பற்றியும், உங்களவரே கவர்னர் ஜெனரல் ஆகப்போவது பற்றியும் நீங்கள் பெருமையடித்துக் கொள்கிறீர்கள், இவர்கள் பார்ப்பனர்களாய் இருப்பதால் தான் இந்தப் பதவிக்கு உரியரானார்களே தவிர எங்களவர்களைவிட அதிகமான யோக்யதை ஒன்றும் இவர்களுக்கு இருந்துவிடவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுங்கள்! இந்நாட்டில் எத்தனையோ அறிவாளிகளான திராவிடத் தாய்மார்கள் இருக்க ஒரு பார்ப்பனத்தி தான் இம்மாகாணத்தில் மந்திரியாக முடிந்ததென்றாலும் அதுவும் உங்களவர் ஆதிக்கத்தினால் தானே ஒழியப் புத்திசாலித்தனத்தால் அல்ல என்பதையும் அறிந்துகொள்ளுங்கள்! 100க்கு 3பேராயுள்ள உங்களுக்கு உயர்ந்த பதவிகள் எல்லாம் சொந்தமாய் இருப்பது முறையல்ல! பாடுபடும் பாட்டாளிகள் சூத்திரர்களாகவும்; பாடுபடாத சோம்பேறி நீங்கள் உயர்ஜாதிக்காரர்களாகவும் இருப்பது நேர்மையல்ல என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்! பொதுவாக உங்களுக்குச் சகல உரிமைகளும் வாங்கிக் கொடுத்தவர்கள் திராவிடர்கள் தான் என்பதை, இந்நாட்டிற்குச் சுயராஜ்யம் வாங்கிக் கொடுத்ததும், திராவிடர்கள் தான் என்பதை நீங்கள் உணருங்கள்! கரையான் புற்றெடுக்கப் பாம்பு குடிபுகுந்ததுபோல் நீங்கள் சுயராஜ்யத்தை உங்களவரின் நன்மைக்காகவே பயன்படுத்திக்கொள்ளல் நியாயமல்ல என்பதை உணருங்கள்! எல்லோருக்கும் சம உரிமை இருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்! உங்களுக்குத்தான் புத்தியுண்டு என்கிற அகம்பாவ அக்கிரகாரப் பேச்சை விட்டொழியுங்கள்! எங்களையும் உங்கள் சகோதரர்களைப் போல் நடத்துங்கள்! எல்லோரையும் சமமாகப் பார்ப்பவர்கள் பிராமணர்கள் என்று கூறிக்கொண்டு எதற்காக உச்சிக்குடுமி வைத்துக் கொள்கிறீர்கள்? எதற்காகப் பூணூல் போட்டுக் கொள்கிறீர்கள்? எதற்காக எங்களைக் கண்டால் தாவிக் குதிக்கிறீர்கள்? எத்தனை நாளைக்கு எங்களவர்களில் சிலரை உங்கள் கையாள்களாக வைத்துக்கொண்டு எங்களை ஏய்த்துவரலாம் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக எங்கள் பக்கம் வந்து விட்டால் உங்கள் கதி என்ன ஆவது?

### இன்றுகூட ஒருவர் வந்தாரே!

இப்போதே வந்து கொண்டிருக்கிறார்களே! அதற்கென்ன செய்யப் போகிறீர்கள்? இன்றுகூட ஒருவர் வந்து விட்டாரே, உங்கள் கூடாரத்தை விட்டு? சென்ற கருஞ்சட்டை மாநாட்டின்போது மதுரையில் எங்கள் பந்தலைக் கொளுத்துவதில் முக்கிய பங்கெடுத்துக்கொண்ட தோழர் ஒருவர் என்னிடம் வந்து "அய்யா நான் அக்கிரகாரக் கும்பலின் பேச்சைக் கேட்டு அன்று ஏமாந்து போனேன். இன்று முதல் நான் உங்கள் சிஷ்யன், என்னை மன்னிக்க வேண்டும் என்று கூறி மன்னிப்புக் கேட்டுக்கொண்டாரே! "அப்பா நீமட்டுமல்ல, நானும்இப்படித்தானப்பா, ஏமாந்தேன். ஆகவே மன்னித்து ஏற்க வேண்டும்" என்று ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவர்களோடு சேர்ந்தேன் என்று ஆறுதல் கூறினேன்! ஒவ்வொரு தோழரும் இப்படித்தானே நடக்க நேரிடும்! அந்த மதுரைக்காரரைத் தூண்டிவிட்ட அக்ரகாரத்து அய்யர் கூறினாராம், டேய், நீ நேற்றுவரை வெறும் ரெங்கசாமியாயிருந்தே, இன்று நீ ரெங்கசாமி நாயக்கர் ஆகி விட்டே" என்று (மதுரைத் தோழர் பெயர் நிச்சயமாக ரெங்கசாமி அல்ல. குறிப்புக்காக இந்தப்பெயர் சொல்ல நேர்ந்தது) அதற்கு அந்தத் தோழர் கூறினாராம், 'நானாவது நேற்று வரை வெறும் ரங்கசாமியாயிருந்து இன்று ரங்கசாமி நாயக்கரானேன். ஆனால் நீ பிறந்தது முதற்கொண்டு அய்யராகவே இருந்து வருகிறாயே, இது நியாயமாகப்படுகிறதா உனக்கு', என்று கேட்டாராம். கேள்வி கேட்ட பார்ப்பனர் பேசாமல் வாயை மூடிக்கொண்டாராம்.

### பார்ப்பனர்கள் தரும் தொல்லைகள்.

இந்தப் பார்ப்பனர்கள் தான் எங்கு பார்த்தாலும் நமக்குத் தொல்லை கொடுத்து வருகிறார்கள். நமது கூட்டங்களுக்குத் தடைவிதிக்கும்படி பார்ப்பனசப் இன்ஸ்பெக்டர்களைத் தூண்டுகிறார்கள். நமது கருப்புச் சட்டைக்காரர்கள் மீது தடையுத்தரவு பிறப்பிக்கும்படி சர்க்காரைத் தூண்டுகிறார்கள். பார்ப்பன வாத்தியார்கள் நமது பிள்ளைகளுக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள். பார்ப்பனத் தலைமை உபாத்தியாயர் திராவிட உபாத்தியாயர்களுக்குத் தொல்லை கொடுக்கிறார். நாம் கோரும் முன்னேற்றத் திட்டங்களையெல்லாம் கூடுமான அளவுக்கு எதிர்க்கிறார்கள். ஆனால் அது சட்டமாகியவுடன் அதன் முழுப்பலனையும் அவர்களே அடைந்து கொள்கிறார்கள். பெண்களுக்கு வயதுவந்த பிறகு தான் கல்யாணம் செய்யவேண்டுமென்று நாம் கூப்பாடிட்டபோது எதிர்த்தார்கள். ஆனால் அது சட்டமான பிறகு அவர்கள்தான் அதன் முழுப்பயனையும் அடைந்து வருகிறார்கள். விவாக ரத்துரிமை, பதிவுத் திருமணம், சொத்துரிமை ஆகிய எதையும் எதிர்ப்பவர்கள் இவர்கள் தான்.

இப்படியாகப் பார்ப்பனர்கள் நம்மை எவ்வளவுதான் எதிர்த்து வந்த போதிலும் நமக்கு ஏதோ நல்ல காலமாய்த்தான் இருந்து வருகிறது. நாம் இதுவரை உயிரோடிருப்பதே ஒரு நல்ல காலந்தான்.

### நான் இறந்தாலும்.

இனி நான் இறந்தாலும் எனையத் திராவிடத் தோழர்கள் ஏமாந்துவிடமாட்டார்கள். எனது வேலையை அப்படியே விட்டுவிடமாட்டார்கள். தொடர்ந்து போராடி வெற்றிபெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டு விட்டது. நமது கொள்கைகள் ஒரு அளவுக்குப் பொது மக்களின் செல்வாக்கைப் பெற்று விட்டது.

# அடுத்த மாநாட்டிற்குள்ளாவது இந்தச் சூத்திரப்பட்டம் அகலவேண்டும்!

இன்னும் கொஞ்ச காலத்திற்குள் நம் இஷ்டம் போல் நடக்காத மந்திரிகளுக்கு மந்திரிசபை நாற்காலி இடம் கொடுக்காது, நம் இஷ்டப்படி நடக்காத அதிகாரிகளுக்கு அதிகாரம் கிடைக்காது. நம் இஷ்டப்படி நடக்காத சட்டசபை மெம்பர்களுக்கு சட்டசபை இடங்கொடுக்காது என்கிற நிலை ஏற்பட்டு விடும். இந்நிலை வெகு சீக்கிரமே ஏற்பட வேண்டுமானால் நாம் எல்லோரும் கருப்புச் சட்டைக்காரர்களாக வேண்டும். நீங்களென்ன சட்டைக்காரர்களோ என்று நம்மைச் சிலர் கேட்கக்கூடும். நம் நாட்டில் சட்டைக்காரர்கள் என்றொரு கூட்டம் இருந்து வருவது உண்மைதான். அவர்கள் பல ஜாதிக்குப்பிறந்தவர்கள், ஆகவே வெறும் சட்டைக்காரர்கள் என்று மட்டும் அழைக்கப்பட்டு வருகிறார்கள். நாம் அப்படிக்கல்ல, நாம் ஒரே ஜாதிக்குப் பிறந்தவர்கள். ஆகவே கருப்புச்சட்டைக்காரர்கள் என்று நம்மை அழைத்துக்கொள்கிறோம். கருப்புச்சட்டை ஒரு படையமைப்பின் சின்னமல்ல. அது இழிவின் அறிகுறி. இழிவிற்காக அவமானப்படுகிறோம், துக்கப்படுகிறோம். அதைப் போக்கிக்கொள்ள முடிவு செய்து விட்டோம் என்பதன் அறிகுறி. பாடுபட்டுப் படி அளந்து விட்டுப் பட்டினிகிடக்கும் நானா பஞ்சமன்? என் பாட்டின் பலனால் நோகாமல் உண்டு வாழும் நீயா பார்ப்பனன். இது நியாயமா?

### கேள்விகளின் அறிகுறி கருப்புச் சட்டை.

பாடுபடும் எங்களுக்கெல்லாம் இழிவான வேலைகள், பாடுபடாத உங்களுக்கெல்லாம் மந்திரிவேலையா? இது நியாயமா? பாடுபடும் நாங்களெல்லாம் அய். சி. எஸ். படிப்பதா? கலெக்டராவதா? இது நியாயமா? நாங்கள் எவ்வளவு தான் பாடுபட்டாலும், எவ்வளவுதான் உங்களுக்கு வாரிக்கொடுத்தாலும், எவ்வளவுதான் சுத்தமாய் இருந்தாலும், எவ்வளவுதான் ஒழுக்கமாய் நடந்து கொண்டாலும் நாங்கள் சூத்திரர்கள், பஞ்சமர்கள்? நீங்கள் எவ்வளவுதான் பாடுபடாத சோம்பேறி வாழ்வு நடத்தினாலும், எவ்வளவோ எங்களை மோசம் செய்து எங்களிடம் பிச்சை எடுத்துப் பிழைத்தாலும், நீங்கள் எவ்வளவுதான் அழுக்குப் பிடித்து, சொறி பிடித்துக் குஷ்டரோகியாகக் கிடந்தாலும், எவ்வளவுதான் ஒழுக்க ஈனர்களாகத் திருடர்களாக கொலைகாரர்களாக, கொள்ளைக்காரர்களாக தூது செல்பவர்களாகக் இருந்தாலும் நீங்கள் உயர்ஜாதிப் பார்ப்பனர்களா? இது நியாயமா? என்ற கேள்விகளின் அறிகுறிதான் இந்தக் கருப்புச் சட்டை?

தோழர்களே! நீங்கள் விரும்பி அணியுங்கள் இதை! அடுத்த மாநாட்டிற்குள்ளாவது நம் சூத்திரப் பட்டம் ஒழிந்து போகும். அடுத்த மாநாட்டிற்குள் இந்த இழி ஜாதிப்பட்டம் கட்டாயம் ஒழிக்கப்பட்டேயாக வேண்டும். அதற்காக ஒரு 2000, 3000 பேர்களாவது பார்ப்பனர்களின் பலிபீடத்தில் தம்உயிரை இழக்கத் தயாராக இருக்க வேண்டும். நானா சூத்திரன்? என் தாய்மார்களா சூத்திரச்சிகள்? இனிஇந்நிலை ஒரு நிமிடநேரமேனும் இருக்க இடங்கொடேன்? இதோ என்உயிரை இதற்காக அர்ப்பணிக்கவும் துணிந்து விட்டேன். என்கிற உணர்ச்சி ஒவ்வொரு திராவிடனுக்கும் ஏற்பட வேண்டும். இழிஜாதிப் பட்டத்தை ஒழிப்பதென்பது சுலபமான காரியமல்ல என்றாலும் உலக அறிவு முன்னேற்றம் ஜாதி உயர்வு தாழ்வுகளை இனி இருக்க விடாது. ஆகவே உறுதி பெற்றெழுங்கள். செத்தாலும் சரி, இழிவு நீக்கம்தான் முக்கியம் என்று. சாகாமலேகூட வெற்றி பெற்றுவிடலாம்.

### இந்த உரை கல்லில் மதிப்பிடுங்கள்.

நமது இளைஞர்களுக்குள் மேலும் கட்டுப்பாடு வேண்டுவது அவசியம். கழகத்தின் பொறுப்பை உணர்ந்து கொள்ளவேண்டும். சுயநலக்காரர்களின் விஷமத்தனத்திற்குப் பலியாகக் கூடாது.

நமது கழகத்தில் சுயநலக்காரர்களுக்கு இடமில்லை. கழகத்தில் தன் சொந்த லாபத்தைக் கருதியிருப்பவனுக்கு இடமில்லை. கழகத்திற்காகத் தம் சொந்தப் பணத்தை, சொந்த உழைப்பைச் செலவு செய்பவர்களுக்குத்தான் கழகத்தில் மதிப்புண்டு. கழகத்தினிடம் ஊதியம் பெற்று வேலை செய்பவன் கழகத்தின் வேலைக்காரனாகத்தான் மதிக்கப்படுவான். எவனொருவன் தன் சொந்தப் பணத்திலிருந்து ஒரு அரைக் காசாயினும் கழகத்திற்குச் செலவு செய்கிறானோ அவனைத் தான் நான் என் நண்பனாக, என் துணைவனாக, என் தலைவனாகக் கூடக் கருதுவேன். கழகம் பாடு படுகிறவனுக்குத்தான் சொந்தமானதே ஒழிய, கழகத்தின் மூலம் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று நினைப்பவனுக்கல்ல. கழகத்தின் பேரால் வாழ்க்கை நடத்துகிறவன் கழகத்தின் வேலைக்காரன். கழகத்திற்காகத் தன் காசைக் கொடுப்பவன் கழகத்தின் நண்பன். எவனையும் இந்த உரை கல்லைக் கொண்டுதான் நமது இளைஞர்கள் மதிப்பிடவேண்டும்.

இவ்விதம் ஆராய்ந்து தெரியாமல் நம் இளைஞர்கள் பொறாமைக்காரர்களின் விஷமப்பிரசாரத்திற்கு இடம் கொடுத்து வருவார்களேயானால் நான் கழகத்தைக் கலைத்துவிடவும் தயங்கமாட்டேன். நமது இளைஞர்களுக்கு உண்மையை உணர்ந்து கொள்வதில் கவலை இருக்கவேண்டும். யாரை வேண்டுமானாலும் தூக்கிக்கொண்டு கூத்தாடும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும். நமது கழகம் தியாகிகளுக்கே சொந்தமான கழகம், சுயநலக்காரர்களுக்குச் சொந்தமானதல்ல என்பதை உணர்ந்து செயலாற்றவேண்டும்.

### ஏமாறாதிருக்கவே இவ்வளவும்.

தலைவன் என்கிறமுறையில் ஏதோ எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். இதற்காக யாரும் வருத்தங்கொண்டு விடாதீர்கள். சுயபெருமைக்காகவும், சுய விளம்பரத்திற்காகவும் சுய நலத்திற்காக மட்டுமே கழகத்தில் இருந்துவரும் தோழர்களின் சொற்கேட்டு ஏமாந்து போகவேண்டாம் என்று எச்சரிக்கை செய்யவே இவ்வளவும் கூறினேன். மக்களின் ஆதரவு நமக்கு ஏற்பட்டுவரும் அளவுக்கு இயக்கத்தைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் என்ற ஆசையால்தான் இவ்வளவு வலியுறுத்திக்கூற நேர்ந்தது என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

### மாநாட்டுழைப்பாளர்களுக்கு மனமார்ந்த நன்றி.

மாநாடு ஒரு குறைவுமின்றி மிக மிகச் சிறப்பாக நடைபெற்றுவிட்டது. இதுவரை யாரும் நடத்தி யறியாத முறையில், எங்கும் நடந்திராத முறையில், இவ்வூர்க்காரர்கள் மாநாட்டை நடத்திக்காட்டியிருக்கிறார்கள். இந்த அளவில்மற்ற ஜில்லாப்பிரமுகர்களுக்கு இவர்கள் ஒரு கஷ்டத்தையே கொடுத்துவிட்டார்கள் என்று கூறவேண்டியிருக்கிறது. இனி நடக்கப்போகும் மாநாடுகளில் எவ்வளவுதான் தங்களால் கூடுமான அளவுக்கு மக்களுக்கு வசதி செய்து கொடுத்த போதிலும் மக்கள் குறைவாகவே, போதாததாகவே கருதக் கூடிய அளவுக்கு இந்த ஊர்க்காரர்கள் வசதி

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

# சென்னை சர்க்கார் அநுமான் சர்க்கார் ஆகிறது!

★

சென்னை மந்திரிகளின் திவ்யமான மூளையிலே ஒரு அபூர்வமான ஏற்பாடு தோன்றி வேலையும் நடந்து விட்டது. அது என்னவென்று கேட்கிறீர்களா?

சென்னை சர்க்காருக்குச் சொந்தமாகப் பல லட்சம் ரூபாய் விலையில் ஒரு விமானம் விலைக்கு வாங்கவேண்டுமென்று தோன்றியதே, அந்தச் சங்கதியைத்தான் அபூர்வமான ஏற்பாடு என்கிறேன்.

சரி! இந்த விமானம் எதற்கென்று எண்ணுகிறீர்களா? உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு பற்றாக்குறைப்பிரதேசங்களுக்குத் துரிதமாகச் சென்று சப்ளை செய்வதற்கு இந்த விமானமா? மேல் நாடுகளில் விமானம் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படுவதைக் கண்டு, நம் நாட்டு விவசாயிகளும் அந்த முறையைக் கற்று உணவுப் பொருள்களைப் பெருக்கவேண்டுமென்ற திட்டத்தினால் கொண்டுவரப்படுவதா இந்த விமானம்? ஆணவப்போக்கினால் ஆட்சிக்கு ஆட்டங்கொடுக்க, அதன் பயனாய் எதிர்க்கட்சி என்பதே இல்லாமல் செய்துவிட வேண்டுமென்று துணிந்து, போட்டிருக்கிற தடைச் சட்டங்கள் அவசரச் சட்டங்கள் போதாதென்று, ஒரேயடியாய் எதிரிகள் வாழும் பகுதிகளையே நிர்மூலமாக்கவேண்டுமென்று வெடித்த கருணையால் வெடிகுண்டு வீசுவதற்குப் பயன்படுத்தப்படுவதா இந்த விமானம்? சென்னையின் எல்லையில் நிஜாம் குண்டர்களால் கொடுக்கப்படும் தொல்லைகளைப் போக்குவதற்காக, குண்டர்களைக் குண்டுக்கிரையாக்க, வரப்போவதா இந்த விமானம்? இந்த நெருக்கடியான நேரத்தில் நமது மாகாண மந்திரிகள் விமானம் வாங்குவதினுடைய நோக்கம் எதுவாயிருக்கலாமென்று யோசிக்கிறீர்களா?

உங்களுடைய எண்ணம், யோசனைகளுக்கு, சென்னை சர்க்கார் அப்படி ஒன்றும் இடங்கொடுத்து விடவில்லை. எதற்காக இந்த விமானம் என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள்.

டெல்லி நகரம் இருக்கிறதே, அதுதான் லகான் கயிற்றைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கிற நேரு மந்திரிசபை இருக்கிறதே, அந்த இடம் நம்முடைய சென்னைக்கு ரொம்ப ரொம்பத் தூரமாய் இருக்கிறது! எந்தச் சங்கதியையும் தான் அவர்களைக் கலந்து கொள்ளாமல் ஒண்ணும் செய்யமுடியவில்லையே! இன்றைக்கு நாங்கள் ஏதாவது ஒரு சிறு சங்கதியைப் பற்றி [எங்களுக்கு நல்லதென்று தோன்றுவதைப் பற்றித்தான்] சொன்னாலும் கூட மறுநாளே அதற்கு மாறுபாடாக மத்திய சர்க்கார் உத்தரவு போட்டுவிடுகிறது! எங்கள் மானம் அல்லவா [மானம் இருந்தால் தானே என்று

## சாட்டி

கேட்கிறீர்களா?] காற்றில் பறக்கிறது! அதைப்பற்றி மத்திய சர்க்கார் கவலைப்பட்டால் தானே! இனிமேல் இந்த நிலையில் ஏதாவது மாறுதல் இருக்குமா என்று எதிர்பார்க்க முடியவில்லை! ஏனென்றால் நம் மாகாண ஆச்சாரியார் [எங்களால் வெறுக்கப்பட்டவர் தான்] வைஸ்ராயாக வந்துவிடப் போகிறார்! அவர் எங்களைப் பற்றி எப்படி நினைக்கிறாரோ தெரியவில்லை! அங்கே போய் உட்காருவதற்கு முன்னாலேயே அவர் என்னென்னமோ பேசுகிறார்! மாகாணப் பற்றையே விட்டுவிடவேண்டுமாம்! குறுகிய பற்றுக் கூடாதாம்! எதற்கும் என்னைக் கேளுங்கள், என்னிடம் முறையிடுங்கள், நான் பார்த்துக் கொள்ளுகிறேன் என்கிறார்!

எங்களைத்தான் மனசில்வைத்து அப்படிச் சொல்லுகிறார் என்பதை நாங்கள் என்ன தெரிந்து கொள்ளவா மாட்டோம்! எங்களுக்கு மொழிப் பற்றாவது மாகாணப் பற்றாவது மண்ணாங்கட்டியாவது! எங்களைப்பற்றி அவர் எப்படி எப்படி எண்ணியிருந்தாலும், உண்மையா, சத்தியமா, ஸ்ரீ ராமர் சாட்சியா எங்களுக்கு ஒண்ணும் அப்படி அபிப்பிராயம் இல்லை என்கிறதை, அவர் கூடிய சீக்கிரம் தெரிந்து கொண்டுவிட வேண்டுமென்று விரும்புகிறோம்! ஏதோ அன்றைக்கு அவரை ஆகஸ்ட் துரோகி என்று சொன்னோம்! (தெரியாமலா சொன்னீர்கள் என்று கேட்காதீர்கள்) ஆனால் அதை இன்றைக்கு நினைத்துக் கொள்ள முடியுமா? நாளைக்கு அவர் வந்து வைஸ்ராயாக உட்கார்ந்தவுடன் அவருக்குப் புகழ் மாலை சூட்டாமல் இருக்க முடியுமா? இப்போது எங்கள் கவலையெல்லாம் அவர் பதவி ஏற்றுக் கொள்வதற்கு முன்னாலேயே நாங்கள் விலைக்கு வாங்கியிருக்கிற விமானம் வந்துவிட வேண்டும்; அந்த விமானத்திலே நாங்கள் சென்று அவரைக் கண்டு தெரிசிக்க வேண்டும்; அதிலிருந்தே இந்த விமானத்தில் நாங்கள் அடிக்கடி வந்து அவருடைய ஆலோசனையையும், ஆசீர்வாதத்தையும் பெற்றுத்தான் ஒவ்வொரு காரியத்தையும் நடத்துவோம் என்பதையும் அவர் தெரிந்து கொண்டுவிட வேண்டும் என்பதுதான்! இதை மனதில் வைத்துக் கொண்டுதான், அவசரம் அவசரமாக முன்னாடியே ஒரு விமான ஓட்டியை இதைக் கொண்டுவருவதற்காக லண்டனுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்! அந்தப் பாவி மனுஷன் சீக்கிரம் வந்துவிட வேண்டுமென்று எங்கள் மனம் துடிதுடிக்கிற துடிப்பு உங்களுக்கு என்னமாத் தெரியும்!

இதிலேகூட இன்னொரு விசேஷம் என்ன தெரியுமோ! நாங்கள் அந்த விமானத்திற்குப் பெயர் வைத்திருக்கிறோமே அது என்ன பெயர்! எப்பேர்ப்பட்ட பெயர்! அடடா! அதையும் கேளுங்கள்! ஹனுமான் என்பது அதன்பெயர்! இந்தப் பெயரைக் கண்டு பிடிக்கிறதுக்குள் நாங்கள்பட்டபாடு இருக்கிறதே அது உங்களுக்கு என்னமாத் தெரியும்? எங்களிலே ஒருத்தர் காந்திஜீ என்று பெயர் வைக்கலாம் என்றார்! [ஏனென்றால் அவருடைய கருத்து இன்னும் கொஞ்ச காலத்திற்கு, அடுத்த தேர்தல் வரைக்குமாவது காந்தி பெயர் செல்லுபடியாகும் என்

பது] இன்னொருத்தர் விபீஷணன் என்று இருக்கட்டுமே என்றார்! [ஏனென்றால் அவருடைய கருத்து, சென்னையிலுள்ள திராவிடர்கள் பழைய ராட்சதர்களாக மாறுவார்களே யானால், நாங்கள் விபீஷணர்களாக நடந்து கொள்ள அட்டியில்லை என்பதை வடநாட்டாருக்குக் காட்டிவிட வேண்டும் என்பது.] இதை மற்றொருவர் மிகக் கடுமையாய்க் கண்டித்தார்! இருந்தாலும் இந்த அகம்பாவம் கூடாது என்றார்! விபீஷணன் என்றால்நாம்ஏதோ பிரதிபலன்கருதுவதாகாதா எனக் கண்களை அகல விரித்தார்! அதுவும் "இந்தா விபீஷணா! இலங்காபுரிராஜ்யம்" என்று இராமர் கொடுக்க அதைப் பெற்று இராமனுடைய தலையீடோ, ஆலோசனையோ இல்லாமல் தனிச் சுதந்தர ராஜ்யாதிபாரம் செலுத்திய விபீஷணனை நாம் ஞாபகப்படுத்துவோமானால் நம் உட்கருத்து என்ன என்று கண்ணாடிபோல் விளங்கவில்லையா என்றார்! அதை மற்றவர்கள் ஆமோதிக்கக் கண்டு "விபீஷணன்!! என்று பிரரேபித்தவர் பிரரேபணையை வெற்றிகரமாக வாபீஸ் வாங்கிக் கொண்டார்! வேறு என்ன பெயர்தான் வைக்கலாமென்று வெகுநேரம் திண்டாடினோம். யார் எந்த ஆலோசனையைச் சொன்னாலும் அதற்கு உடனே மறுப்பு! எவரும் குற்றங்குறை சொல்ல முடியாத பெயராக இருக்கவேண்டுமே என்பதை எண்ணும் போது நாங்கள் திகைத்து விட்டோம்! அடடா! இந்த உலகத்தில் எத்தனை குழந்தைகள் பிறக்கின்றன! அத்தனைக்கும் எப்படிப் பெயர் வைத்துவிடுகிறார்கள்! என்பதை எண்ணி எண்ணி ஆச்சரியமடைந்தோம்! இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்காக நம்முடைய முன்னோர்கள் பெயர் வைக்கிற விஷயத்தில் கண்டுபிடித்திருக்கிற குறுக்கு வழியை நினைத்துப் பார்த்து, பாட்டன் பெயர், பாட்டி பெயர், ஆண், பெண் சாமி பெயர்களைக் குழந்தைகளுக்கு வைக்க வேண்டுமென்று இந்தப் பிரச்னையை எவ்வளவு சுலபத்தில் தீர்த்து வைத்திருக்கிறார்கள் என்று அவர்கள் மூளையைப் பாராட்டினோம்!

இந்தப் பாராட்டுதல் எல்லாம் எதற்கு? இப்பொழுது ஆகவேண்டியதற்கு ஒரு யோசனையைச் செய்யாமல் வீண்பேச்சிலே காலத்தைக் கடத்துவது நல்லதா? என்று இன்னொருவர் கடிந்து கொண்டார். இந்த நிலையில் தான் ஒருவர் நான் ஒரு பெயர் சொல்லட்டுமா? என்று தயங்கித் தயங்கிக் கேட்டார்! சொல்லுங்கள் என்று ஏககாலத்தில் கூவினோம்! ஏன் ஹனுமான் என்று வைக்கக் கூடாது என்றார்! ஒவ்வொருவரும் இதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டார்கள். கேள்விக்கு மறுப்பாக எவரும் ஒன்றும் கூறவில்லை! தாராளமாக இந்தப் பெயரே இருக்கட்டும் என்றார் ஒருவர்! நாம் மத்திய சர்க்காரோடு ஒத்துழைத்து அவர்கள் கட்டளைப்படியே நடப்போம் என்பதற்கு இதைக் காட்டிலும் வேறு அடையாளம் எப்படிக்காட்ட முடியும் என்றார் இன்னொருவர். ஆகா! இது ராஜாஜிக்குப் பிடித்தமான பெயரல்லவா என்றார் மற்றொருவர்! அடடா! ஆகாய மார்க்கமாகக் கடலைக் கடந்து இலங்கையை யடைந்து, இலங்கையைத் தீக்கிரையாக்கி, ஸ்ரீராமன்சொன்ன அங்க மச்ச அடையாளங்களையெல்லாம் அணு அணுவாகச் சோதித்துப் பார்த்து இவரே எம்பெருமாட்டி! என்று ஸ்ரீதேவியைக் கண்டு பிடித்துத் தசரதகுமாரனை உயிர்தரிக்கச் செய்த சமய சஞ்சீவியல்லவா இந்த ஹநுமான்! என்று பக்தி பரவசத்தோடு பாராட்டினார் பிறிதொருவர்!

இப்படியே பாராட்டுப் பேச்சு வளர்ந்து கொண்டே போயிற்று! அதையெல்லாம் அப்படியேசொல்வதற்கு இடம் காலம் ஏற்றதாயில்லை! கடைசியாக இப்பேர்ப்பட்ட மகத்தான பெயரைச் சொன்னவர் யார் என்று பார்த்தோம்! எங்களுக்கேற்பட்டிருந்த திகிலில், முதலில் அந்தப் பேர்வழியைக் கவனிக்கவில்லை! பிறகோ அவர் தன்னைக் காட்டிக் கொள்ளவில்லை! எங்களுடைய முயற்சி வீணாயிற்று! ஒவ்வொருவரும் மற்றொருவரைப் பார்த்து நீங்கள்தான் இந்தப் பெயரைச் சொல்லியிருக்கவேண்டும் என்று கேட்பதும், அவர் நான் இல்லை என்று பலமாகத் தலையாட்டுவதுமாகவே சிறிது நேரங்கழிந்துவிடவே பிறகு ஒருமனதாக முடிவு கட்டினோம்! இதை யார் சொல்லியிருந்தால்தான் என்ன? நாமெல்லோருமே இந்தப் பெயரைச் சொன்னதாகவும் அது நிறைவேறியதாகவும் இருக்கட்டுமே என்று தீர்மானித்து இந்தப் பெயரை வெளியிட்டோம்!

எப்படி இந்த விளக்கம்?

இவ்வளவு விளக்கமாகவா, மந்திரிகள் சொல்லியிருக்கிறார்கள் என்று முழிக்கிறீர்களா? இப்படி ஒன்றும் சொல்லவில்லை என்றாலும் இந்தக் கருத்துக்கெல்லாம் அதிலே இடமுண்டு. அவர்கள் அறிவிப்பை அப்படியே கீழே தருகிறேன், படியுங்கள்.

"சென்னை மே. 22. டில்லி போன்ற நீண்டதூர இடங்களுக்குச் சர்க்கார் ஜோலியாய்ப் போக மந்திரிகளின் உபயோகத்திற்காகச் சென்னை சர்க்கார் ஒரு விமானம் வாங்கியிருக்கின்றனர்.

இந்த விமானம் லண்டனில் வாங்கப்பட்டது. இதைக் கொண்டுவர பெங்களூரிலிருந்து ஒரு விமான ஓட்டி ஏற்கனவே லண்டனுக்குச் சென்றிருக்கின்றார்.

ஹநுமான் ஆகாச மார்க்கமாகக் கடலைக்கடந்து இலங்கை சென்றதைக் குறிக்கும்படியாக இந்தவிமானத்திற்கு ஹநுமான் என்று பெயரிடப்படலாம்."

இது தான் பத்திரிகைகளில் வெளி வந்த அறிவிப்பு.

நாட்டு நிலைமையைத் தெரிந்து கொள்ள வாய்ப்புடையவர்களாய், நாடாள வந்திருக்கிற நம் அருமை அமைச்சர்கள், மூன்றரை லட்சம் செலவில் விமானம் வாங்கிய டாம்பீக மைனர் விளையாட்டான மனப்போக்கைக் கண்டு அழுவதா? சிரிப்பதா? ஆச்சாரியார், வடநாட்டார் ஆகியோரின் திருவடியேசரணம் என, அநுதினமும் அவர்கள் பாதகமலங்களைப் போற்றி, அவர்கள் ஆலோசனையைச் சிரமேல் தாங்கி, அவர்கள் சொல் எங்கள் செயல் என்பதற்காகவே இந்த விமானம் என்று விளக்கம் கூறியிருப்பதை எண்ணி அழுவதா? சிரிப்பதா? அந்த விமானத்திற்கு அநுமான் என்பது பெயர் என்ற அறிவிப்பைக் கேட்டு அழுவதா? சிரிப்பதா? என்று நீங்கள் தயங்குகிறீர்களா?

எப்படியோ நீங்கள் ஒரு முடிவைக் கட்டி அழுது தொலையுங்கள் அல்லது சிரித்துத் தொலையுங்கள்! என் கவலை யென்ன தெரியுமா?

அய்யய்யோ! அநுமான் என்று பெயர் கொடுத்திருக்கிறார்களே! அநுமானுடைய ஜாதக விசேஷம்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

# இந்த முறை தவறு.

★

குறிப்பு:— திராவிடர் கழகப் பத்திரிக்கையோ எழுத்தாளரோ தீட்டியதல்ல! எதிர்முகாமில் இருக்கும் "தமிழ்மணி" சென்ற வாரம் தீட்டியிருக்கும் தலையங்கம். [ஆ-ர்.]

மத்திய சர்க்கார், உத்தியோகங்கள் விஷயத்தில் ஜாதி, மத வேற்றுமை பாராட்டுவதை ஒழித்து விடப் போவதாகத் தீர்மானித்து விட்டார்களாம்! ஏனெனில், இந்துக்களில் பல்வேறு பிரிவுகள் இருப்பது புதிய வித்தியாசங்களை உண்டு பண்ணுவது போலாகுமென்றும்; அது தற்போதைய சர்க்காருடைய கொள்கைக்கு ஏற்றதாக இல்லையென்றும் சொல்லுகிறார்கள். இதுபற்றி திட்டமான சுற்றறிக்கையொன்று மாகாண சர்க்கார்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ரொம்பசரி; ஜாதி, மத வேற்றுமைகளை ஒழிக்க வேண்டுமென்ற ஞானோதயம் இப்பொழுதாவது தோன்றிற்றே! அது வரையில் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால், இப்படிப்பட்ட திட்டத்தின்மூலம் உண்மையில் ஜாதி வேற்றுமைகளும், அவற்றால் இது வரையில் ஏற்பட்டிருக்கும் அல்லல்களும் அகன்று வருமா என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

ஜாதி, மத வேற்றுமைகள் ஒழிய வேண்டும் என்பதை மறுத்துக்கூறும் மக்கள் யாரும் இக்காலத்தில் இருக்க முடியாது. நாமும் ஜாதி வேற்றுமைகளை ஒழிக்கவேண்டியதின் அவசியத்தைப் பலமுறை வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆனால் இப்பொழுது இந்திய சர்க்கார் கொண்டிருக்கும் கொள்கை உண்மையில் ஜாதி வேற்றுமைகளை களையக்கூடியதாக இல்லை என்பதே நமது அபிப்பிராயம். அது மட்டுமல்ல, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஜாதி வேற்றுமைகளால் தமிழர் இதுகாறும் எப்படிப்பட்ட கஷ்டங்களுக்கு ஆளானார்களோ அத்தகைய கஷ்டங்கள் மேலும் வளர இந்திய சர்க்கார் வழிவகுத்து விட்டார்கள் என்றே சொல்லவேண்டும். உத்தியோக விஷயங்களில் ஜாதி வேற்றுமை காட்டப்படுவதுதான் இந்திய சர்க்காரின் கண்ணில் படுகிறதே தவிர, சமுதாயத்துறையில் இந்த ஜாதி வேற்றுமைகளால் எவ்வளவு தீமைகள் வளர்ந்துள்ளன என்பதை அவர்கள் உணரவில்லைபோலும். பிராமண, க்ஷத்திரிய, வைசிய சூத்திர என்னும் நான்கு பிரிவுகளை அடிப்படையாகக்கொண்டு பல்லாயிரம் ஜாதிகள் உண்டாயின. அப்படி உண்டான ஜாதிகளில், உயர்வு தாழ்வும் கற்பிக்கப்பட்டன. இதன் பலனாக உயர் ஜாதியார் என்று கருதப்படுகிறவர்களைத் தவிர மற்றவர்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறமுடியாமற் போயிற்று. ஜாதி உயர, உயர பொருளாதார வசதி பெருகுவதும், ஜாதி குறைய குறைய பொருளாதார வசதி குறைவதுமாக ஆகிவிட்டது. ஒரு குறிப்பிட்ட சமூகம் முன்னேறவும், பெரும் பான்மையோரைக் கொண்ட மற்றொரு சமூகம் முன்னேற முடியாமலும் போய்விட்டது. இந்த ஏற்றத்தாழ்வை சரிசெய்து எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்பதற்காகவே உத்தியோகங்கள் வழங்கும் விஷயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்வமுறை கையாளப்பட்டது.

ஜாதி வேற்றுமைகளை ஒழிப்பதாகச் சொல்லிக்கொண்டு இந்திய சர்க்கார் இந்த வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையில் கைவைத்து விட்டனர். மாகாண சர்க்கார்களும் இந்திய சர்க்காரின் உத்தரவின்படி நடக்கப்போகின்றன என்பதையும் நாம் அறிவோம். எனவே, சென்னை மாகாண சர்க்காருக்கு நாமொன்று கூற விரும்புகிறோம். உத்தியோக விஷயத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையை நீக்கிவிடுமுன் இங்கு நூற்றுக்கு 97 பேராகவுள்ள தமிழர்கள் எந்த அளவு முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்; அவர்களில் எத்தனை சத விகிதம் கற்றவர்களாக விளங்குகின்றனர்? என்பவைகளையும், நூற்றுக்கு 3 பேராகவுள்ள மற்றொரு கூட்டத்தினர் எவ்வளவு முன்னேற்றமடைந்துள்ளனர்; அவர்களுள் கல்விகற்றவர்களின் சதவிகிதமென்ன? என்பதையும் சற்று ஆராய்ந்து பார்த்து, இந்நிலையில் வகுப்புவாரி பிரதிநிதித்வ முறையையும் ஒழித்துவிட்டால் தமிழருடைய எதிர்காலம் என்னவாகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். தகுதி, திறமை என்பவைகளைக் காட்டி எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் அளித்து, பொதுமக்களின் நல்வாழ்வுக்கு வழிகோலும் நல்ல முறையை இம்மாகாண சர்க்கார் தட்டிக்கழித்தால், ஏற்கனவே புண்பட்டிருக்கும் தமிழரின் உள்ளத்தை மேலும் புண்படச்செய்வதாகும். ஜாதி வேற்றுமைகளை ஒழிக்கவேண்டும் என்ற உண்மையான எண்ணம் இந்திய சர்க்காருக்கு இருக்குமானால் அதற்கு ஏற்றவழி இதுவல்ல. ஜாதி வேற்றுமைக்கு அடிப்படையாகவுள்ள காரணங்களைக் கண்டறிந்து அவற்றைப் தகர்த்தெறிய சட்டங்கள் செய்யப்படவேண்டுமேயொழிய, உத்தியோக விஷயத்தில் வேற்றுமை காட்டக் கூடாது என்று உபதேசம் செய்வது ஓரவஞ்சனை செய்வதேயாகும். இதனைத் தமிழர்கள் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஜாதி உயர்வைக் காட்டி ஏற்கனவே ஒரு கும்பல் பொருளாதாரத் துறையில் முன்னேறிவிட்டது. அதன் காரணமாக அக்கும்பலுக்குக் கல்விகற்க ஏராளமான வசதிகள் கிடைத்துவிட்டன. இங்ஙனம் கல்வியைப் பெற்ற அக்கும்பல் ஆட்சியையும் கைப்பற்ற ஏதுவாகிவிட்டது. இப்படிப் பட்டவர்களுடன் போட்டிப்போட்டு தமிழரும் முன்னேற வேண்டுமானால், வகுப்புவாரி பிரதிநிதித்வமுறை இருந்தே தீரவேண்டும்.

மேலும் வகுப்புக்களையும், ஜாதிகளையும் வைத்துக்கொண்டு வகுப்புவாரி முறையைமாத்திரம் ஒழிக்க முயல்வது பெருந்தவறு. பொதுஜன சர்க்காரே இந்தத்தவறைச் செய்யுமானால், பொதுமக்களுக்கு சர்க்காரிடமுள்ள நம்பிக்கை குறைந்து போகும். அதுமட்டுமின்றி பாலஸ்தீனப் பிரச்சனையில் எப்படி வல்லரசுகளின் சுயநலத்தால் யூத—அரபுக்களிடையே வம்பு வளர்ந்ததோ, அதே போன்ற நிலை இங்கும் ஏற்படும். இதுவிரும்பத்தக்கதா என்பதை எண்ணிப்பாருங்கள். இதே சமயத்தில் தமிழர்களுக்கும் நாமொன்று கூறவிரும்புகிறோம். அதாவது உத்யோகவிஷயத்தில் மத்திய சர்க்கார் கொண்டிருக்கும் கருத்து தமிழர்களைப் பாதிக்கக் கூடியது என்பதை மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் உணரும்படி எடுத்துக்காட்டவேண்டிய அவசரமும், அவசியமுமான கடமை தமிழருடையது என்பதை எந்தத் தமிழனும் மறந்து விடக்கூடாது. இப்போதுள்ள நிலைமையில் தமிழர் ஏமாந்து விட்டால், அவர்கள் தலைதூக்க எத்தனை தலைமுறைகள் ஆகுமோ சொல்லமுடியாது: எனவே, தமிழர் இதனை யாருக்கோ வந்த விருந்துஎன்று அலட்சியமாய் இருந்து விடாமல், இது தமிழருக்குச் சோதனைகாலம் என்றும், நாம் தரும் இந்த அறிவிப்பை ஓர் அபாய அறிவிப்பாகவும் கொள்ள வேண்டும்.

21—6—48ம் நாள் பௌரணமியில்
கைலாஸ் ஹில்ஸ் ஹெர்ப் (ரிஜிஸ்ட்)
ஒரு டோஸ் உட்கொண்டால்
5-வகையான ஆஸ்த்துமாவும்
சுகமாகும்.
ஆங்கிலம் அல்லது இந்தியில் எழுதுக:
BRAHMACHARI G. DAS
Sri Sidh Brahmacharya
Sewa Ashram,
P. C. Chitrakot, U. P.

# குடி அரசு

5—6—48 சனிக்கிழமை.

## அவசர அறிவிப்பு !

இந்த நாட்டின் எதிர்கால அரசியல் நிர்வாகம், எந்த முறையில் இருக்க வேண்டுமென்பதை வகுப்பதற்காக, காங்கரஸ் மேலிடத்தின் கட்டளைப்படி நியமிக்கப்பட்டிருக்கும் நிர்ணய சபை உறுப்பினர்கள், எந்த நியாயமான வழியாலும் தகுதியுடையவர்கள் ஆக மாட்டார்கள் என்பதையும், இவர்களை நியமித்த முறையை ஜனநாயகவாதி என்று தன்னைச் சொல்லிக்கொள்ளுகிற எந்தமட்டரகமான பேர்வழியும் எந்தவொரு நியாயத்தைக் கொண்டும் ஆதரிக்க முடியாது என்பதையும், உண்மைப் பாட்டாளிகளும், இந்த நாட்டுக்குரிய மக்களுமான திராவிடர்களின் பிரதிநிதித்துவமற்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த அரசியல் நிர்ணயசபை, ஏதோ ஒரு அரசியலை நிர்ணயம் செய்யுமானால் அந்த நிர்ணயம் திராவிடர்களைக் கட்டுப்படுத்த மாட்டாதென்பதையும், வலிந்து பலவந்தமாகப் புகுத்தப்படுமானால் திராவிடர்கள் அதை ஒருமுகமாக எதிர்த்தே தீருவார்கள் என்பதையும், ஜனநாயகம், சுயராஜ்ஜியம், தன்னாட்சி என்ற சொற்களை இந்திய உபகண்டத்தின் தலைவர்கள் பித்தலாட்டம் இல்லாமல் கையாளுகிறார்கள் என்று உலகம் கருத வேண்டுமானால், அ. நி. சபையை உடனே கலைத்து விடவேண்டியதுதான் முறை என்பதையும், அ. நி. சபைக்கு வெள்ளையன் வழியமைத்துக் கொடுத்ததிலிருந்தே திராவிடர் கழகம் அடிக்கடி எடுத்துக் காட்டி வந்திருக்கிறது.

சென்ற வாரத்தில் பெல்காமில் கூடிய சோஷியலிஸ்டுகள்—நாம் அ. நி. சபையின் அமைப்பு முறையிலுள்ள சர்வாதிகார ஆணவத்தை எடுத்துக் காட்டி அதை அதிவிரைவில் கலைத்துவிட வேண்டுமென்று கூறிய நேரத்தில், காங்கரஸ்காரர்களோடு கலந்து கூடிக் குலாவிக் கொண்டிருந்து, அப்பொழுது அதைப் பற்றி ஒன்றும் கூறாமல் நேற்றைக்குக் காரங்கரசை விட்டுப் பிரிந்து வந்த இந்த சோஷயலிஸ்ட்கள், இன்றைக்கு அ. நி. சபையை உண்மையான பிரதிநிதித்துவம் அற்றதென்றும், அதை உடனே கலைத்துவிட வேண்டும் என்றும், இந்திய யூனியன் பிரிட்டிஷாருடன் ரகசியப் பேச்சு வார்த்தை நடத்துகின்றதென்றும் குற்றஞ் சாட்டித் தீர்மானித்திருக்கிறார்கள். காங்கரஸ் செய்த எல்லாச் செயல்களுக்கும் உடந்தையாயிருந்து, ஒத்துழைப்பும் செய்த இவர்கள் இன்று இப்படித் தீர்மானித்திருக்கின்றார்கள் என்றால், ஒரு அப்ரூவரின் சாட்சியத்திற்குக் கொடுக்க வேண்டிய அளவு மதிப்பாவது, இவர்கள் தீர்மானத்திற்குப் பொதுமக்கள்—திராவிடக் காங்கரஸ்காரர்கள் கொடுக்க வேண்டுமல்லவா?

சோஷயலிஸ்ட்டுகளின் இந்தத் தீர்மானத்தைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஏன்? பின்வருவதை முன்னறிந்துரைக்கும் அரசியல்மேதாவிகள் என்ற கருத்தோ, தீரர்கள், தியாகிகள், செல்வாக்கு வாய்ந்தவர்கள் என்கிற கருத்துசளோ நம் மகிழ்ச்சிக்குக் காரணமல்ல. வடிகட்டி எடுத்த பார்ப்பனீயத்தின் தலைமை நிலையமான சோஷியலிஸ்ட் கட்சி, நாம் எவ்வளவோ நாளைக்கு முன்னால் கூறிய கருத்தை இன்று திருப்பிக் கூறுகிறதே என்பதால்தான்.

திராவிடர்களின் துக்க நாள் ஆகஸ்ட்டு 15ல் ஆரம்பம் என்று அன்று கூறிய பெரியாரவர்கள், மிகுந்த மனவருத்தத்துடன்தான்—ஆனால் உண்மையைக் கூற வேண்டுமே என்ற நோக்கத்துடன்—பலருடைய கண்டனம், தூஷணை ஒன்றையும் பொருட்படுத்தாமல் இந்த உண்மையை விளக்கமாகக் கூறினார்கள்.

இது வெள்ளையருக்கும், காங்கரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்த ஆட்சிதானே ஒழிய, இந்திய மக்களுக்கு ஏற்பட்ட சுதந்தர ஆட்சியல்ல. இதன் பயனாய் இந்த நாட்டிலுள்ள காங்கரசல்லாத மக்களுக்கு நன்மையில்லை, பிரதிநிதித்துவமில்லை.

இது தான் அன்று பெரியாரவர்கள் வெளியிட்ட அறிக்கையிலுள்ள வாசகம்.

திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாடவேண்டுமென்று 1947 ஜூலை முதல் தேதி திராவிடர் கழக நிர்வாகத் தலைவர் விடுத்த அறிக்கையிலும் இந்த அ. நி. சபை பிரதிநிதித்துவமற்றதென்றும் இது திராவிடர்களைக் கட்டுப்படுத்தமாட்டாது என்றும் வற்புறுத்தியிருக்கின்றார்கள்.

சென்ற மாதம் 8, 9ம் நாட்களில் தூத்துக்குடியில் நடந்த 18வது திராவிடர் மாநாட்டிலும் அ. நி. சபை நடவடிக்கை திராவிடர்களைக் கட்டுப்படுத்தாது என்றும், திராவிடர்களின் பிரதிநிதித்துவம் பெற்றதல்லவென்றும் ஒன்றரை லட்சம் மக்கள் ஒருமனதாகத்தீர்மானித்திருக்கின்றார்கள்.

இந்த மாநாட்டில் அ. நி. சபையைக் குறித்துப் பெரியாரவர்கள் பேசியிருந்த பகுதியை அப்படியே இங்கு தருகிறோம்.

"இன்றைய அரசியல் பிரதிநிதி சபை யாரால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டது? அவர்களைத் தெரிந்தெடுத்தவர்கள் யார்? தெரிந்தெடுத்தவர்களைத் தெரிந்தெடுத்தவர்களும், அரசியல் நிர்ணயசபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களும் எந்தத் தன்மையில் பொது மக்கள் பிரதிநிதிகள் ஆனார்கள்? இவர்களை யார் தெரிந்தெடுத்தார்களோ அவர்களுக்காவது, பொது மக்கள் அரசியல் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் உரிமை கொடுத்தார்களா? இந்தப் பேச்சோ, இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படும் என்கின்ற கருத்தோ,நினைவுக்குவர ஹேதுவோ, ஏதாவது அந்தக் காலத்தில் இருந்தது என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கிறேன்."

"எனவே இன்றைய ஆட்சியானதுபொதுமக்கள்பேரால் கையில், தந்திரத்தில், சுயநலத்தில் வலுத்த ஒரு கூட்டுக் கொள்ளைக் கோஷ்டியாரின் ஆட்சி என்று சொல்லத்தான் வயப்பட்டதாகலாமே தவிர இந்நாட்டு மக்களின் பிரதிநிதித்துவ ஆட்சி என்று சொல்லச் சிறிதும் இடமில்லை, விளக்கத்துக்

காகத் திரும்பவும் சொல்லுகிறேன். 1935ம் ஆண்டு சீர்திருத்தத்தில் 100க்கு 12 பேருக்கே ஓட்டு உண்டு. அதுவும் படித்தவர்களுக்கும், பணக்காரர்களுக்கும், சொத்துடையவர்களுக்கும் தானே ஒழிய படியாத, சொத்தில்லாத, பாட்டாளி மக்களாகிய 100க்கு 90 பேர்களுக்கு ஓட்டுக் கிடையாது. இதற்குக் காரணம் "அன்னியனுடைய ஆட்சி" என்று சொல்லலாம். ஆனால் இப்படிப்பட்ட பிரதிநிதித்துவம், சுயராஜ்ஜியத்துக்கும், மக்கள் ராஜ்ஜியத்துக்கும், பாட்டாளி மக்கள் ராஜ்ஜியத்துக்கும் ஏற்றதாகுமா? என்று கேட்கிறேன்."

இதைத் தான் சோஷியலிஸ்ட் மேதாவிகள் இன்றைக்குப் புதிதாகக் கண்டுபிடித்தவர்கள் போல் தீர்மானித்திருக்கின்றார்கள் என்ற உண்மையைத் திராவிடப் பொது மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தக் கண்டுபிடிப்பைக் கண்டு பிடித்தவர்கள் இனிமேல் இதை ஒரு முக்கியமான பிரச்சாரமாகக் கொள்வார்களா? என்பதையும் திராவிடப் பொதுமக்கள் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

படித்தவர்களுக்கும் சொத்துடையவர்களுக்கும் ஓட்டுரிமை என்ற திட்டத்தினால், 100க்கு 3பேரான பார்ப்பனர்கள் 100க்கு 100 பேரும் ஓட்டர்களாகிவிட, பார்ப்பனர்கள், படித்த 100க்கு 7பேரான திராவிடர்கள், சில பணக்காரத் திராவிடர்கள், ஆகியவர்களே இந்த நாட்டுக்கு உரிமையுடைய மக்களாகவும், எஞ்சிய 100க்கு 90 பேரான பாட்டாளித் தொழிலாளிகள் உரிமையற்ற அடிமைகளாகவும் வெள்ளைக்காரன் வகுத்த 1935ம் வருஷச் சீர்திருத்தச் சட்டப்படி ஆக்கப்பட்டு விட்டார்கள்.

இந்தச் சீர்திருத்தச் சட்டத்தின்படி 100க்கு 10, 12, பேரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான் சட்டசபை உறுப்பினர்கள். இவர்கள் இந்த 10, 12 பேருக்குப் பிரதிநிதிகளா? நாட்டு மக்கள் அனைவருக்கும் பிரதிநிதிகளா? இதைப் பொது மக்கள் எண்ணவேண்டும் என்று சட்டசபைக்குத் தேர்தல் நடந்த காலத்திலேயே, திராவிடர் கழகம் ஏன் தேர்தலில் கலந்து கொள்ளவில்லை என்பதற்குக் கூறிய காரணங்களுள் ஒரு காரணமாகக் கூறியது.

**செல்வம் கொழிக்கும் திருநாடு!**

செத்து மடியும் மட்டும் உழைக்கும் உழைப்பாளிகள்! ஆனால் இந்த நாடு ஏன் ஏழை நாடாக இருக்க வேண்டும்? பாடுபடும் பாட்டாளி பலன்காணாமல், மனித மிருகமாகத் தொல்லைப்படும் தொழிலாளி சுகங்காணாமல், இந்த நாடு சீர்குலைவதாயிருந்தால் இந்த நாட்டின் ஆட்சி மாறவேண்டாமா? கொள்ளையடிக்கும் வெள்ளையன் ஆட்சி மறைய வேண்டாமா? இந்த நாட்டுச் செல்வம் இந்த நாட்டில் தங்கிஇந்த நாட்டுப் பாட்டாளி மக்கள் பலனடைய வேண்டாமா? எல்லோரும் இந்நாட்டு மன்னராகி இந்த நாட்டை நாமேசுயராஜ்ஜியமாக ஏன் ஆளக்கூடாது?

இது தான் ஆட்சிமாற வேண்டும் என்று, சுயராஜ்ஜியம் வேண்டுமென்று அன்றைக்கு முழக்கமிட்டவர்களின் முழக்கம்.

இந்த முழக்கத்தின்படி அதாவது வெள்ளைக்காரன் எந்தத் திட்டத்தைக் கொண்டு இந்த நாட்டை ஆண்டானோ அந்தத் திட்டத்தைக் குறைகூறி, அந்தத் திட்டமே இந்த நாட்டை இருந்தும் இல்லாத நாடாக, உழைத்தும் உழைத்த பயனை உட்கொள்ள முடியாத மக்களாக ஆக்கி விட்டது என்று விளக்கி, ஆட்சிமாற வேண்டும், அதற்கான வேறு திட்டம் வேண்டும் என்று கூறியதற்கேற்ப சுயராஜ்ஜிய ஆட்சிக்கு வழிகோல வேண்டுமல்லவா?

எந்த நாடும் சொந்த நாடாக இல்லாமல், இந்தவுலகக் கவலையைவிட்டு விடு! மறுவுலக மாண்பை நினை! என்று மற்றவர்களுக்குப் போதிப்பதையே தொழிலாகக் கொண்ட பார்ப்பனீயம்—இந்த நாட்டில், தான் உழைக்காமலே தன் தொந்தி வாடாமல் இருக்க வேண்டும் என்ற ஒரு காரியத்திலேயே கருத்தாகவுடைய பார்ப்பனீயம், அந்தப் பார்ப்பனீயப் போதனையையே பரம அவுடதமாகக் கொண்டு பார்ப்பனீயத்திற்கு அறிவை அடகுவைத்த படித்தவர்கள், பார்ப்பனீயத்தின் பாதுகாப்பாலும் படித்தவர்களின் ஒத்துழைப்பாலும் மற்றவர்களைச் சுரண்டிப் பிழைத்துப் பொருள் சேர்க்கும்பணக்காரர்கள் ஆகிய இந்தத் திருமூர்த்திகள் கையில் ஆட்சி மாறுவதற்குத்தான் சுயராஜ்ஜியம் என்று பெயரா?

இந்தத் திருமூர்த்திகள், பார்ப்பனப் பாதுகாப்பு சபையாம் காங்கரஸ் மேலிடம் என்கிற பாவிஸப் பரமனின் கட்டளைப்படி நியமித்த அ. நி. சபை பிரதிநிதிகள்தான், சுயராஜ்ஜிய அரசியலை நிர்ணயம் செய்யும் பிரதிநிதிகளா?

பார்ப்பானைக் கொண்டு மனு தர்மம் எழுதச் சொன்னால் அது எப்படி இருக்கும்? வக்கீல்களைக் கொண்டு சட்டம் வகுக்கச் சொன்னால் அந்தச் சட்டம் யாருக்கு நன்மையாய், உதவியாய் இருக்கும்? திருடர்களைக் கொண்டு போலீஸ் படைக்குப் பயிற்சி கொடுக்கச் சொன்னால் அந்தப் பயிற்சி திருடனைக் கண்டு பிடிப்பதற்குப் பயன்படுமா? இதைப் போலத்தானே இந்த நாட்டு மக்களின் உழைப்பைச் சுரண்டுவதற்கு, உதவி செய்பவர்களாகவும், தரகர்களாகவும், காட்டிக் கொடுப்பவர்களாகவும் இருந்த இந்தத் திருமூர்த்திகளை —வெள்ளைக்காரனுடைய ஆட்சி நடைபெறுவதற்கு முக்கியமான, உண்மையான தூண்களாக இருந்த பிரகஸ்பதிகளை— யார் எக்கேடுகெட்டால் என்ன? எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த நாணயம் செல்லுபடியிலிருக்கிறதோ, அதையொட்டிப் போவது தான் நம் சுயநல வாழ்வுக்குச் சுகமளிக்குமுறை என்பதைப் பின்பற்றும் பச்சோந்திகளை—இந்த நாட்டின் எதிர்கால அரசியலை வகுக்கச் சொன்னால் அது எப்படியிருக்கும்? யாருக்கு நன்மையாயிருக்கும்? அந்த முறையில் ஆட்சி நடந்தால் இந்த நாட்டில் புதிய மாறுதலாக எதைக் கண்டுவிட முடியும்? பாட்டாளித் தோழன் எள்ளுமூக்கத்தனையாவது பலனடைந்துவிடுவானா? என்று கேட்கிறோம்.

நியாயம், நேர்மை என்கிற போக்கையோ, ஜனநாயகம் என்கிற முறையையோ இப்போதைய இந்திய யூனியன் தலைவர்கள் லவலேசமாவது தெரிந்தவர்கள் என்றால், உடனே இந்த அ. நி. சபையைக் கலைத்துவிட வேண்டும்! இத்தனை நாட்களாக நடந்து இவ்வளவு பெரும் பொருள் செலவாகியிருக்கிறதே என்கிற எண்ணம்—தடையுணர்ச்சிக்கு இச்செயலில் இடங்கொடுக்கக் கூடாது! வெள்ளைக்காரன் காண்பித்த பாதையில் நடப்பதற்குத் துணிந்த நம் விபரீத அறிவினால் இந்த இழப்பு உண்டானதென்று புத்தி கொள்முதல் கணக்கில் பற்று எழுதிவிட வேண்டும்! நாம் செய்த

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குற்றத்தை நாமே குற்றமென்ற முறையில் ஒப்புக் கொள்வதா என்கிற எண்ணம், விபரீதத்தோடு விநாசத்தையும் விரைவாகக் கூட்டி வரும் என்பதை, ஆட்சிப் பீடத்திலேறி அலங்கோலப்படுத்துபவர்களுக்கு நாம் வற்புறுத்திக் கூறுகிறோம்.

இப்போதைய அரசியல் நிர்ணய சபையைக் கலைத்து விட்டு உடனடியாகச் செய்ய வேண்டிய மறு வேலை இப்போதைய அடக்கு முறைத் தர்பார்களை யெல்லாம் சுருட்டிக் கட்டி மூலையில் தூக்கி எறிந்து விடவேண்டும்! எந்த ஒரு அரசியல் கட்சி மீதும் எந்த ஒரு பத்திரிக்கையின் மீதும் தடைஉத்தரவுகளோ அவசரச் சட்டங்களோ பிரயோகமாகியிருப்பதை யெல்லாம் வெற்றிகரமாக வாபீஸ் வாங்கிவிடவேண்டும்! தன்னுடைய போக்கிரித்தனத்தை தானேஉணர்ந்து கைவிடுவதா என்கிற தருக்கானபோக்குக்கு இடங்கொடுக்கக் கூடாது! அதையொட்டிச் செய்யப்படவேண்டிய மற்றொருவேலை பாதுகாப்பு. நாட்டில் எங்கும் கொள்ளையும் கொலையும் பெருகி, சுருட்டின மட்டும் ஆதாயம் என்று கருதும் தடிதூக்கிகளும், பந்தம் ஏந்திகளும், துப்பாக்கி தாங்கிகளும் கடுமையாகக் கருவறுக்கப் பட வேண்டும்! இந்திய யூனியன் முதன் மந்திரியே எப்பொழுதும் முள் வேலிக்குள் வாழ்ந்து ஆக வேண்டும் என்றிருக்கிற இந்தப் பயங்கரமான நிலைமையை, வெளியில்போனால் வீட்டுக்குவந்துசேருவது என்ன நிச்சயம்? என்று பொது மக்கள் கருதும் இந்த விபரீதமான ஆட்சியின் எதிரொலியை, அறிந்து அதற்கு ஆவன செய்ய முன் வரவேண்டும்!

அ. நி. சபையைக் கலைத்தல்! அடக்கு முறைகளைக் கைவிடல்! அனைவருக்கும் பாதுகாப்புத் தரும் ஆட்சி! இந்த ஆட்சியின் அடிப்படையில் தான் அ. நி. சபையை அமைக்கமுயற்சி செய்ய வேண்டும்!

அ. நி. சபை அமைப்புக்கு முதல் முயற்சி, இந்த நாட்டு மக்கள் யாராயிருந்தாலும், இந்த நாட்டுப் பிரஜை என்ற ஒன்றையே தகுதியாகக் கொண்டு, பிரஜாவுரிமையைப் பேணி, எல்லோருக்கும் ஒரு தன்மைப்படி ஓட்டுரிமை கிடைக்கச் சட்டம் செய்யப்பட வேண்டும்! இந்தக் காரியத்தை, அரசியல் நிர்ணயத்துக்கு அடிப்படையான இந்த முறையை வகுத்துவிட்டு, இப்போதையத்திருமூர்த்திகளின் அ.நி. சபை கலைந்துதொலையட்டும்! இந்தச் சட்டத்தை நிறைவேற்றிய பிறகு, எந்தப் பத்திரிகைக்கும், எந்தக் கட்சிக்கும் தடை என்பது கொஞ்சமுமில்லாமல், தங்கள் தங்கள் கருத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு, பிரசாரம் செய்வதற்கு, சமசந்தர்ப்பம் கொடுத்துத் தகுந்த பாதுகாப்பளிக்கட்டும்! பிரசாரத்திற்கு ஒரு நீண்ட, போதுமான காலம் கொடுத்தபின் அ. நி. சபைக்கு மட்டுமல்ல, மாகாண சட்டசபைகளுக்கே மறுதேர்தல் வைக்கட்டும்! என்று நேர்மையில் நம்பிக்கை வைத்திருக்கும் ஒரே காரணத்தினால், இந்த ஆலோசனையைத் திராவிடப் பெருங்குடி மக்களின் சார்பாக இந்திய யூனியன் தலைவர்களுக்கு நாம் கூறுகிறோம்.

இந்தக் காலத்தில் இருக்கும் தலைவர்களைப் போல இனிமேல் இந்தயுகத்தில் வேறு தலைவர்களைக் காணமுடியாது! என்று தற்பெருமை பேசுவதை நிறுத்தி, தகாத வழியில் செல்லுவதையும் தகுந்தபாடம் கற்றுக் கொள்வதையும் நினைப்பூட்டி, நாம் காட்டும் வழி நல்லதென்றுபட்டால், இந்த வழியைப் பின்பற்றுவோம்! என்று ஏனைய சகாக்களுக்கு எடுத்துக் கூறுவதே, மணமகளைப் பார்க்கத் துடிக்கும் மணமகன் போல வைஸ்ராய் பதவியில் குந்துவதற்கு இருக்கும் ஆச்சாரியார் அவர்களின் கடமையாகும் என்பதை நாம் நினைப்பூட்ட விரும்புகிறோம். வைஸ்ராய் பதவி என்கிற இந்திராணி முன்பு பல இந்திரர்களுக்கு இடங்கொடுத்து, பின்பும் பல இந்திரர்களுக்கு இடம் கொடுக்க இருக்கிறது என்கிற இந்திராணி—இந்திரன் கதையையும் நாம் அவருக்கு நினைப்பூட்டி வைக்கிறோம்.

மந்தி கையில் பெற்ற மணமாலை சிந்திச் சிரழிவதுபோல, ஆட்சியின் தன்மையை உணராத அவலர்களின் பெருக்கத்தினால், விபரீதம் தழைத்து விநாசமே ஓங்கும்படியான இந்தச் சூழ்நிலையில், திருமூர்த்திகளின் அரசியல் நிர்ணயதைப் பலவந்தமாக நிர்ணயம் செய்யப்படுமானால், திராவிடர்கள்மீது வலுக்கட்டாயமாகச் சுமத்தப்படுமானால், "பிணமாக வேண்டும் அல்லது பிணமாக்கப்பட வேண்டும்'' என்கிற நிலைமைதான் சிருஷ்டித்ததாக முடியும்! என்று எச்சரிக்கை கொடுக்கின்றோம்.

பொறுப்பும் பிரதிநிதித்துவமும் தகுதியும் அற்ற அ. நி. சபையை அழித்துவிடு! இதுவரை செய்யப்பட்ட அரசியல் நிர்ணயத் திட்டத்தை ஆற்றில்போடு! பொது மக்கள், பாட்டாளி மக்கள் பிரதிநிதியைப் பொறுக்கு! புது அரசியல் நிர்ணயசபையை அமை! என்பவையான இவை தான் திராவிடத் தோழர்களின் எதிர்காலப் பிரச்சாரமாய் உடனடி வேலையாயிருக்க முடியும்.

திராவிடர்களே! நீங்கள் நெடுங்காலம் எதிர்பார்த்திருந்த ஒரு சந்தர்ப்பம்—உங்கள் வாழ்வா அல்லது சாவா என்பதை நிர்ணயிக்க வேண்டிய நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது! கச்சை கட்டுங்கள்! தயார்என்கிற பேரோசையை நாம் எந்த நேரத்திலும் எதிர்பார்த்தவர்களாயிருக்கிறோம்! இதுதான் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு நாம் செய்யும் அவசர அறிவிப்பு.

★

# இந்தி நுழைகிறது!

★

செகண்டரிக் கல்வி முறையில் திருத்தம் என்ற பெயரில், 49-50ம் ஆண்டுக்காக என்று சென்னை சர்க்கார் சென்ற மாதம் 30ம் நாள் வெளியிட்டிருக்கும் திட்டத்தின் வழியாக மீண்டும் சென்னை மாகாணத்தில் இந்தியை நுழைக்கின்றார்கள்.

சென்னை சர்க்கார் செய்திருக்கும் கல்வி மாறுதல்களில் குறிப்பிடக் கூடியவை.

1. முதல் பாரத்திலிருந்து 3ம் பாரம்வரை கைத்தொழிலை அடிப்படையாக வைத்துப் பாடத்திட்டம் வகுத்திருப்பது.
2. ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய மண்டலங்களில் இந்துஸ்தானி, சமஸ்கிருதம், அரபு, பாரசீக மொழி, அல்லது உருது ஆகியவைகளில் ஏதேனும் ஒன்று 2வது மொழியாக, கட்டாயமாகப் படிக்க வேண்டிதாகும். தமிழ் மண்டலத்தில் மட்டும் மாணவர் விரும்பினால் படிக்கக்கூடிய விருப்ப பாடமாக இருக்கும்.
3. ஆங்கிலம் 2வது பாரத்திலிருந்து 6பாரம்வரை கற்பிக்கப்படும். இது 3வது மொழியாக இருக்கும்.

குறிப்பிடத் தகுந்த இந்த

மூன்று மாறுதல்களைப் பற்றியும் நம் கருத்து என்ன? என்பதை விளக்க வேண்டுமென்றாலும் இப்போது 2வது மாறுதலைப் பற்றி மட்டும் அதாவது தமிழ் நாட்டில் விரும்பினால் இந்தி படிக்கலாம் விரும்பாவிட்டால் கட்டாய மில்லை; ஆனால் தமிழ்நாடு தவிர்த்த மற்ற பகுதிகளில் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்கிற இரட்டை முறை (சின்ன வர்ணாச் சிரமமுறை)யைப் பற்றிமட்டும் குறிப்பிடுகிறோம்.

ஆச்சாரியாரின் மந்திரிசபை, வடநாட்டில்யாருக்கோ ஒருவர்க்கு வாக்குக் கொடுத்தேன் என்ற சாக்கைக் கூறிச் சென்னை மாகாணத்தில் இந்தியைக் கட்டாய இந்தியாகத் திணித்து, ஆயிரக்கணக்கான தாய்மார்களையும் கட்டிளங் காளைகளையும் வெஞ்சிறை (காங்கரஸ்காரர் புகுந்த சொகுசான சிறையல்ல) புகச்செய்தும், ஈவு இரக்கம் என்பதைச் சுட்டுப் பொசுக்கி விட்ட ஆட்சியாளர்களால் திராவிடத்தின் தனிப் பெருந் தந்தை வெப்பமிகுந்த பெல்லாரிச் சிறையில் தள்ளப் பட்ட உடல் வாடவும், தாளமுத்து—நடராஜர்களின் பிணங்களைக் கண்டும் வெறி தணியாமல் அற்பாயுளில் ஓடிவிட, அதன் பின் வந்த ஆலோசகர் சர்க்கார் அந்தக் கட்டாய இந்தியை ரத்துச் செய்ததை நாங்கள் மறக்கவில்லை என்பதை இப்போதையச் சென்னைச் சர்க்கார்—ஓமந்தூரார் மந்திரிசபை இந்த உத்தரவால் காட்டிக்கொண்டிருக்கிறது.

எதிர்ப்பிருப்பதை மறக்காத இந்த மந்திரி சபையார், எதிர்கால விஞ்ஞான வாழ்வுக்குக் கொஞ்சமும் பயன்படக்கூடிய நிலையில் இல்லாத, மனிதப் பண்பை விளக்கும் இலக்கியப் பெருமையையுடையது என்றுகூட சொல்லும் படியான நிலையில் இல்லாத, மிகுந்த பிற்போக்குடைய இந்தியை மீண்டும் சென்னை மாகாணத்தில் திணிக்க முன்வந்து விட்டார்கள்.

"தமிழ் தெலுங்கு போன்ற தொன்மையும் பண்பாடும் நிறைந்த மொழி மண்டலங்களில், அவ்விரண்டு மற்ற இந்தியைப் புகுத்த நினைப்பது தவறு! புகுத்தவதற்காகச் செய்யப்படும் முயற்சி எவ்வளவு பெரியதாயிருந்தாலும், நீண்ட காலம் தொடர்ந்து அந்த முயற்சி நடந்தாலும் திராவிட மண்டலத்தில் அது நிறைவேறாது! கருதுகிற பலன் கைகூடாது" என்ற அறிஞரின் வாக்கியத்தை, ஆளவந்தார்களுக்கு நாம் நினைப்பூட்டுகிறோம். இக்கருத்தைச் சொல்லுகிறவர் பெரியார் இராமசாமி அல்ல! சர் கே. வி. ரெட்டி நாயுடு மல்ல! பசுமலைப் பாரதியாரு மல்ல! சென்னை மாகாணத்தவரே அல்ல! ஒரு வடநாட்டுக்காரர், ஒரு பல்கலைக் கழகத் துணை வேந்தர், அமர்நாத்ஷா என்பதையும் அறிய வேண்டுகிறோம்.

மக்களின் அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்ய முடியாத இந்த இந்தியை, இந்தியாவின் பெரும் பகுதியில் பேசினால் புரிந்து கொள்ளமுடியும் என்ற காரணத்தையும், வடநாட்டு வியாபாரத்துக்கு வசதியாயிருக்க முடியும் என்ற காரணத்தையும், வடநாட்டுத் தலைவர்களோடு அரசியல் குறித்து அளவளாவ அமைப்புடையது என்ற காரணத்தையும், வேள்ளைக்குஒன்றாகக்கூறி வந்த காங்கரஸ்காரர்களின் உண்மையான நோக்கம், திராவிட நாகரீகம், கலாச்சாரம் ஆகியவைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, திராவிடர்கள் ஆரிய நாகரீகத்தை யேற்று மானமிழந்து வாழ்வதுடன், வடநாட்டாருக்கு என்றைக்கும் மீளா அடிமைகளாகவே விளங்கவேண்டும் என்பது தான் என்கிற உண்மையைப் பல முறை நாம் விளக்கி வந்திருக்கின்றோம். இதை நாம் முன்பு கூறிய போது ஒப்புக்கொள்ளாத காங்கரஸ் மந்திரிகள், இப்பொழுது வெளிப்படையாகவே சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். "அரசாங்க உத்தியோகங்களுக்கு இந்திப்படிப்பும் ஒரு தகுதி" என்கிற அமைச்சர்களின் உண்மையான நோக்கம் என்ன?

உன் நாட்டில் உனக்கு உத்தியோகம் வேண்டுமானால் இந்தியைப்படி! என்று ஒருபுறம் சொல்லிக்கொண்டு, மாகாணத்தின் மற்ற மண்டலங்களில் இந்தியை, 2வது மொழியைக் கட்டாயப்படுத்திவிட்டு, தமிழ் மண்டலத்தில் மட்டும் விரும்பினால் படியுங்கள்! விரும்பாவிட்டால் உங்கள் இஷ்டம்! என்கிற இந்தத்திட்டத்தைக் கண்டு திராவிடர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று மந்திரிசபை எதிர்பார்க்கமாட்டாது என்று நம்புகிறோம். ஏன் என்றால் இந்தி இந்த நாட்டில் பரவக்கூடாது என்று கருதுபவர்களின் உண்மையான நோக்கம் என்ன? என்பதை இந்த மந்திரிசபை அறிந்தே இருக்க வேண்டும். இந்தி என்பது வேற்றுமொழி—வடநாட்டு மொழி என்கிற துவேஷத்திற்காக இந்நாட்டில் எதிர்ப்பு உண்டாகவில்லை. இந்தியைப் பரப்புவதால் இறந்துபட்ட சமஸ்கிருதத்திற்கு-இந்த நாட்டு மக்களைச் சூத்திரர்களாகவும், தீண்டப்படாதவர்களாகவும், வேசி மக்களாகவும் ஆக்கிவைத்த சமஸ்கிருதத்திற்கு-புத்துயிர் கொடுக்கப்பட்டு, பார்ப்பான் காலைக் கழுவிக் குடிப்பதே மோட்சம் என்று கருதும்படி செய்த பழைய நிலைமை மாறி, பார்ப்பானுக்குப் பிறந்தவர்கள் நாங்கள் என்று சொல்லும்படியான கேவலமான புதிய நிலைமை உண்டாகத்தான் பயன்படுவதாயிருக்க முடியும் என்பதையும், இந்த அனுமானம் காட்சிப் பிரமாணத்தினால் கண்டது என்பதையும், இதுதான் இந்தி பரவக்கூடாது என்பவர்களின் உண்மையான நோக்கம் என்பதையும் அறிந்து கொண்டிருக்கிற மந்திரிசபை—மேலும் இந்தியை எதிர்ப்பவர்களின் நோக்கம் தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல் சென்னை மாகாணம் முழுவதுமே இந்தி பரவக்கூடாது என்பதுதான் என்பதை அறிந்து கொண்டிருக்கிற மந்திரிசபை—இந்த இரட்டை ஆட்சி முறையை ஏன் கைக்கொள்ள வேண்டும்? மந்திரிகளின் பொறுப்பற்ற தன்மையை, வஞ்சகமாய்த் தன்னினத்தைக் கழுத்தறுக்கும் கொடுமையை, இந்நடவடிக்கை காட்டவில்லையா? என்பதோடு இம்மந்திரிகளின் யோக்கியதையைப்பற்றியும் எவருக்கும் சந்தேகத்தைக்கொடுக்காதா? என்றும் கேட்கின்றோம்.

ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய மண்டலங்களில் இந்தி அல்லது இரண்டாவது மொழி, கட்டாயம் என்று மந்திரிசபை சொல்வதிலிருந்து, அந்த மண்டலங்களில் உள்ள மக்களைச் சர்க்கார் எப்படிக் கருதுகிறது? சமஸ்கிருத அடிமைகளான அவர்கள் கட்டாய இந்தியை எதிர்க்கமாட்டார்கள் என்கிற நினைப்போ, கையாலாகாத ஈயவர்கள் என்கிற கருத்தோ தானே இந்த வர்ணாச்சிரமத்திற்குக் காரணமாயிருக்க முடியும்? ஒரே இனமான திரா

விடர்களை, "பிரித்தாலும் சூழ்ச்சியே வெற்றிதரும்" என்றுகண்ட பார்ப்பனர்களின் பழைய வர்ணாச்சிரம முறையை, இப்போதும் கைக்கொள்வதுதான் வெற்றியைத் தரும் என்று வஞ்சகமல்லவா இந்த இரட்டை ஆட்சிக்குக் காரணமாகும்? என்றும் கேட்கின்றோம்.

தமிழ் நாட்டுக்கு இந்தி இஷ்டபாடம் என்றாலும்கூட இதனுடைய பலன் எப்படியாகும்? இன்றைக்கு ஹைஸ்கூல்களில் தலைமை ஆசிரியர்களாய் இருப்பவர்கள் எல்லாம் பெரும்பாலும் பார்ப்பனர்களாகவும், காங்கரஸ்காரர்களாகவும், காங்கரஸ் ஆட்சிக்கு அடிபணிந்துதானே ஆகவேண்டும் என்கிற நிலையிலிருப்பவர்களாகவுமே இருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட தலைமை ஆசிரியர்கள் இந்தச் சட்டத்தை எப்படிப்பயன்படுத்திக் கொள்வார்கள்?

படிக்கிற மாணவர்களின் எண்ணிக்கை ஒரு பக்கம் வளர்ந்து கொண்டு வருகிறது! படிப்புச் சொல்லிக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையோ அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாமல் இருக்கிறது! இந்த நிலைமையில் மாணவனுக்கு இடமில்லை என்பதையே பல்லவியாகத் தலைமையாசிரியர்கள் பாடிக் கொண்டு வருகிறார்கள் என்பதைக் கழிந்த பல ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டு வருகிறோம். பள்ளிக்கூடத்தில் இடமில்லை, படிப்பவன் விரும்பினால் இந்தி படிக்கலாம் என்கிற இந்த நிலைமையைத் தலைமை ஆசிரியர்கள் எப்படிப் பயன்படுத்துவார்கள்? மாணவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்க வந்திருக்கும் கார்டியன், இந்த நெருக்கடியான கட்டத்தில், எப்படியாவது பையன் பள்ளிக்கூடத்தில் சேர்ந்துவிட வேண்டுமென்று விரும்புவானா? அல்லது இந்தியை வெறுப்பதினால் தன் பையன் படிக்காமலே போகட்டும் என்பதை விரும்புவானா?

100க்கு 90 தற்குறிகளாக இருக்கும் திராவிட மக்களைக் கார்டியனாகப் பெற்றிருக்கும் மாணவர்கள், தலைமை ஆசிரியர் வழியாகக் கட்டாயப்படுத்தப்பட்டு, இந்தி படித்தே ஆகவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டுதான், பெயரளவில் இந்தி இஷ்டபாடம் என்று இன்றைய மந்திரி சபை இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

ஆகவே தமிழ் மண்டலத்தில் இந்தி இஷ்ட பாடமென்றாலும், உண்மையாய்க் கட்டாய பாடமாகவே ஆகிறது என்பதைத் தமிழ் மக்களும் தெரியாதவர்களல்லர்.

இப்போது தமிழறிஞர்கள் என்று பெயர் படைத்திருக்கிற தமிழ்ப் பெரியார்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? மற்ற திராவிட மொழிகளின் அறிஞர்கள் என்ன செய்யப்போகின்றார்கள்? இந்தியை வரவேற்றுச் சிந்து பாட மாட்டார்கள் என்பதுறுதி என்றாலும், ஆட்சியின் கொடுங்கோன்மைக்கு அஞ்சி வாய்மூடி மவுனிகளாக விளங்குவார்களா? அல்லது திராவிடத்தின் சிதைவுக்குத் திட்டமிட்டுச் செய்யப்படும் இந்தத் தீச்செயலை தீரத்துடன் எதிர்த்து, சென்னை மாகாணத்திலேயே இந்தி நுழையாதபடி எதிர்ப்பு முன்னணியில் நிற்கப்போகிறார்களா?

திராவிடத்தின் மொழி அறிஞர்கள்தான் திராவிடத்தின் சீர்கேட்டிற்குக் காரணம் என்றிருக்கும் பழி மறைவதற்கு, அந்த அறிஞர்களுக்குத் தரப்பட்டிருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் என்றே நாம் உண்மையாய், உறுதியாய் இந்தத் திட்டத்தைக் குறித்து எண்ணுகிறோம்.

திராவிடப் பெருங்குடி மக்களே! உங்கள் நாட்டை ஆளப்போவது இந்திமொழி! ஆளுகிறவர்கள் வடநாட்டுக் கையாட்கள்! ஆட்டிவைப்பவர்கள் வடநாட்டுப் பனியாக் கும்பல்! சுரண்டும் கும்பல் தயாரித்த, உங்கள் சுகவாழ்க்கைக்கு வழிகாணாத, உங்களை மனிதர்களென்றே மதியாத, அரசியல் நிர்ணயத் திட்டமே உங்களுக்கிடப்படும் விலங்கு! இருந்து வரும் கொஞ்ச நஞ்சம் உரிமைகளுக்கும்வேட்டு வைக்கிறது, எடுத்துவிடப்போகும் வகுப்புவாரித்திட்டம்! இதனுடைய பொருள் என்ன? திராவிடன் வாழ்வதற்குத் திராவிடத்தில் உரிமையில்லை! உரிமையற்ற, ஒடுக்கப்பட்ட மக்களாக, விலங்குகளினும் கேடாக வாழ்ந்தால் வாழவேண்டும். இன்றேல் வாழ்வா—சாவா என்ற இரண்டி லொன்றை முன்நிறுத்தி எதிர்த்து நிற்கவேண்டும். இந்த இரண்டில் ஒன்றுதானே இந்தத் திட்டங்களின் பயனாய் இருக்க முடியும். நீங்கள் என்னமுடிவுகட்டுகிறீர்கள்? எதை விரும்புகிறீர்கள்?

## காந்தியார் கொலை வழக்கு.

டில்லி மே 28.

நேற்று காந்தியார் கொலை வழக்கு விசாரணையின் போது கோர்ட்டுக்குத் தரப்பட்ட குற்றப்பத்திரிக்கையில், குற்றவாளிகள் பட்டியலில் மேலும் மூன்று பெயர் காணப்பட்டன. அவர்கள் தலைமறைவாயிருக்கின்றனராம்.

10. கங்காதர் ஸாகாராம் தன்வாதே
11. கங்காதர் ஜட்டே
12. சூர்யதேவ் சர்மா.

டில்லி ஜுன் 3.

இன்று கூடிய கோர்ட், விசாரணை நாளை 14ந் தேதியிலிருந்து 22ந்தேதியாக மாற்றியது.

எதிரிகளின் வக்கீல் போபத்கார், தானும் மற்ற வக்கீல்களும் எதிரிகளைச் சிறையில் சென்று காணப் போதிய உத்தரவு வேண்டும். கோர்ட் கூடும் நேரம் மாற்றவேண்டும் என்றார். முதல் கோரிக்கை நிறைவேறியது.

எனக்கு இதைவிட வேறொன்று கிடைக்க இருக்கிறது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறி, 3, 4 மணி நேரம் தொடர்ந்து தண்ணீரோ, உணவோ தரப்படாமல் நடத்தப்படுகிறோம் என்றும், இது போலீஸ் கூடமா? சிறைச்சாலையா? என்றும் கோட்ஸே கேட்டான். அவன் கோரிக்கைகள் கவனிக்கப்படும் என்று ஜட்ஜ் உறுதி கூறினார்.

---

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வாலில் நெருப்பு வைக்கப்பட வேண்டுமே! அதனால் பெரியசேதமல்லவா உண்டாகும்! என்பது ஒரு கவலை.

ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் சிறிய திருவடியின் பெயரைக் கொடுத்துவிட்டு, அந்தப் சிறிய திருவடியின் மீது இந்த அற்பநார்களான மாமிசப் பிண்டங்களின் சிறிய திருவடி ஏறி மிதிக்கும் படியாக, குந்தும்படியாக நடக்கும் அக்கிரமத்தைக் கண்டு எம்பெருமான் நாராயண மூர்த்தி பொறுத்துக் கொண்டிருப்பாரா! அவர் கோபித்தால் என்னாவது என்பது மற்றொரு கவலை!

இந்தக் கவலைப்பட வேண்டியவர்கள் மந்திரிகள் அல்லவா என்கிறீர்களா? எப்படியோ போகட்டும்! அநுமான் சிரஞ்சீவியாய் வாழட்டும் என்பதுதான் என்னுடைய ஆசை!

ஆனால் சிரஞ்சீவி என்றால் அற்பாயுஸ் என்றுதானே அர்த்தம், ஏன் இந்த சர்க்கார் அநுமான் சர்க்கார் ஆகிறது என்கிறீர்களா? எப்படியோ? மந்திரிகளையே கேட்டு விடுங்கள்! அதுதான் சரி.

# கோயில்களுக்குப் போகாதீர்!
# போனால் தடியுடன் போங்கள்!

★

செய்து கொடுத்து மக்களைப் பழக்கி விட்டார்கள். நாளைக்கு ரயில்வே ஸ்ட்ரைக்கால் சிலர் தங்க நேரிடுமே என்று கூறினால் ''பரவாயில்லை அதற்கும் சேர்த்துத்தான் அரிசி பருப்பு வாங்கியிருக்கிறோம்,'' என்று கூறுகிறார்கள்.

இவ்வளவு ஏற்பாடுகளுக்கும் முக்கிய பொறுப்பாளிகளாயிருந்த தோழர் வி. வி. தனுஷ்கோடி நாடார், தோழர் நீதிமாணிக்கம், தோழர், ஷண்முகம் ஆகியவர்களுக்கு எனது சார்பாகவும், கழகத்தின் சார்பாகவும், உங்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியறிதலையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### விளையாட்டுப் பிள்ளையல்ல! வினையாற்றும் கர்ம வீரர்!

நான் தோழர் கே. வி. கே. சாமி அவர்களை இதுவரை ஒரு விளையாட்டுப்பிள்ளை என்று நினைத்திருந்தேன். அவர் இம்மாநாட்டுச் செயலாளராயிருந்து பணியாற்றியதைப் பார்த்ததிலிருந்து அவர் இத்திராவிட நாட்டின் கவர்னர் பதவியைக் கொடுத்தால்கூட அதையும் பார்த்துக் கொள்ளக் கூடிய திறமை பெற்றிருக்கிறார் என்று கூறவேண்டியிருக்கிறது. அவருடன் ஒத்துழைத்த தொண்டர்களின் சிறப்பைப்பற்றி நான் கூறவேண்டியதே இல்லை. நீங்களே அவர்களைப்பற்றி நன்கு அறிந்து கொண்டிருப்பீர்கள்.

இவ்வூர்ப் போலீஸ்காரர்களும், போலீஸ் அதிகாரிகளும் தம்கடமையைத் திறம்பட ஆற்றியிருக்கிறார்கள். நமக்கு எவ்வித தொல்லையோ இடைஞ்சலோ செய்யாமல் இருந்ததற்கு நாம் நமது மகிழ்வு கலந்த நன்றியறிதலை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இவ்வூர் மகாஜனங்களும் நம்மைப் பரிவுடன நடத்தியிருக்கிறார்கள். வீதியிலோ, உணவுச்சாலைகளிலோ எங்குமே நம் தோழர்களுக்கு யாரும் தொல்லை கொடுக்கக் காணோம். எங்கும் அன்பையே கண்டோம். எல்லாம் வெகு திருப்திகரமாகவே நடந்தேறிவிட்டது.

### தாய்மார்களுக்கு சிலவார்த்தைகள்.

கடைசியாக இங்கு திரளாகக் கூடியிருக்கும் தாய்மார்களுக்குச் சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். என் அருமைத் தாய்மார்களே! நீங்கள் பல தொந்தரவுகளுக்கும் உள்ளாகிப் பல கஷ்ட நஷ்டங்கள்பட்டு இங்கு வந்து இரண்டு நாள் தங்கிச் செல்வதற்காக ஏதாவது உருப்படியான பலன் பெற்றுச் செல்ல வேண்டாமா? எதற்காக நீங்கள் இங்கு வந்தீர்கள்? இது ராமேஸ்வரம் அல்லவே பிள்ளை வரம் வாங்கிக் கொண்டுபோக. இந்த இடத்தில் அரசமரமும் வேப்பமரமும் இல்லையே சுற்றிச் சென்றால் கர்ப்பம் தரிக்குமென்று சுற்றிப் போவதற்கு! இதுதிருப்பதியும் அல்லவே, உள்ள காசைப் பார்ப்பானிடம் பறிகொடுத்து விட்டு மொட்டை அடித்துக் கொண்டு போக.

### கோயிலுக்குப் போகாதீர்! குண்டர்களுக்குப் பொருளைச் கோடுக்காதீர்!

இது அறிவு பற்றிப் பேசும் இடம். ஆகவே நீங்களும் ஏதாவது அறிவு பெற்றுச் செல்ல வேண்டாமா? கொஞ்சம் காது கொடுத்துக் கவனத்தோடு கேளுங்கள். தாய்மார்களே! நீங்கள் தற்போது தழுவி நிற்கும் ஹிந்துமத வர்ணாச்சிரம தர்மப்படி நீங்கள் சூத்திரச்சிகள், பார்ப்பனனின் தாசிகள் என்பதை முதலில் உணர்ந்து கொள்ளுங்கள். கடவுள்களுக்கும் நீங்கள்தான் தாசிகள். எந்தக் கடவுளும் சூத்திரச்சிகளுடன்தான் லீலை செய்ததாகப் புராணக் கதைகள் கூறுகின்றனவே ஒழிய எந்தக் கதையும் கடவுள் பார்ப்பனத்திகளோடு லீலை செய்ததாகக் கூறக்காணோம். கடவுள் அவதாரமெல்லாம் நம் பெண்களின் கற்பைத்தான் சோதித்ததாகக் கதைகளில் கூறப்படுகிறதே ஒழிய, நம்மவரின் பெண்களைத்தான் கைப்பிடித்திழுத்துக் கற்பழித்ததாகக் கூறப்படுகிறதே ஒழிய எந்தக் கதையிலும் பார்ப்பனப்பெண் கடவுளால் கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்படக் காணோம். அவ்வளவு இழிவுபடுத்தி விட்டார்கள் இந்த அன்னக் காவடிப் பார்ப்பனர்கள்நம்மை. இதைஅறியாமல் நீங்கள் இன்னும் அவன் காலடியில் வீழ்ந்து காசு பணம் அழுது வருகிறீர்கள்.

இனி நீங்கள் ஒரு காசுகூட எந்தப் பார்ப்பானுக்கும் அழக் கூடாது. உங்கள் வீட்டு நல்ல காரியங்களுக்கோ, கெட்ட காரியங்களுக்கோ அவனை ஒரு நாளும் அழைக்கக் கூடாது. நீங்கள் கோயிலுக்குப் போகக் கூடாது. போவதாயிருந்தாலும் பார்ப்பான்தான் பூசை செய்ய வேண்டுமென்கிற கட்டுத் திட்டம் உள்ள கோயிலுக்கோ இரண்டு பெண்டாட்டிகளைக் கட்டிக்கொண்டு அதோடு ஒரு வைப்பாட்டியையும் வைத்திருக்கும் சாமிகளுள்ள கோயிலுக்கோ, நீங்கள் கட்டாயம் போகக் கூடாது.

### போவதானால் தடியுடன் போங்கள்.

அப்படிப் போவதானால், போகும் போது ஒரு தடி எடுத்துக்கொண்டு போங்கள், தேங்காய் வெற்றிலைபாக்குக்குப் பதிலாக! அந்தத் தடியால் அடித்துக் கேளுங்கள், அந்தச் சாமியை! நான் தடியால் அடிக்கிறேன். நீ அழாமல் இருக்கிறாயே! உனக்கு உயிர் கிடையாது; நீ வெறும் குழவிக் கல் சாமி, அதனால்தான் நான் அடிப்பது உனக்குத் தெரியவில்லை. அப்படியிருக்க உனக்கேன் பெண்டாட்டி? அப்படித்தான் பெண்டாட்டி வேண்டுமென்றால் ஒரு பெண்டாட்டி போதாதா? இரண்டு பெண்டாட்டி ஏன் உனக்கு? இரண்டு பெண்டாட்டிகள் தான் இருந்து தொலையட்டும். ஒரு தடவை அவர்களைக் கலியாணம் செய்து கொண்டால் போதாதா? வருடா வருடம் ஏன் உனக்குக் கலியாணம் நடக்க வேண்டும்? அதுவும் போதாதென்று வைப்பாட்டிகள் வேறு வேண்டுமென்கிறாயே! இது நியாயமா? இத்தனையும் வேண்டுமானால் வைத்துக்கொள். அண்டங்களை எல்லாம் படைத்த உனக்கு நாங்கள் ஏன் சாமி படியளக்க வேண்டும்? உனக்கு வேண்டியதை உன்னால் தேடிக் கொள்ள முடியவில்லை. நீயா எங்களுக்குப் படியளக்கப் போகிறாய்? ஏன் சாமி மௌனம் சாதிக்கிறீர்கள்? கல்லில்லையானால், நீர் உண்மையில் கடவுள் ஆனால், நாங்கள் தரும் பொருள் உனக்குச் சேர்வதில்லையானால், உன் பேரால் எங்களைக் கொள்ளையடித்துவாழும் இந்த் அன்னக்காவடிப் பார்ப்பானை ஏன் நீர் தண்டிக்கக் கூடாது? என்று தடியால் அடித்துக் கேளுங்கள். பதில் இல்லையானால் நாங்கள் கூறுவதுபோல் அது வெறும் குழவிக்கல் என்பதை அறிந்து கொண்டு வீடு திரும்புங்கள். பிறகு ஒரு வார்த்தை உங்களை எதிர்த்துப் பேசுவார்களா, உங்கள் கணவர்கள்?

### இந்தக் கடவுளா உங்கள் கடவுள்.

கடவுளுக்கே இந்தக் கதியானால் அவர்கள் தம் கதி என்னவாகும் என்று அவர்கள் புரிந்து கொள்ளமாட்டார்களா? அப்புறம் ஒரு நாள் வெளியே போவார்களா, உங்கள் புருஷர்கள்; வேறு மங்கையர்களைத்தேடி? அந்தச் சாமியை அடித்து வைத்தவன் நம்மவன். அந்தச் சாமிக்கு உயிர்ப்பிச்சை கொடுக்கக் கும்பாபிஷேகம் நடத்த உதவியது நம்முடைய பொருள்;

# பெண்கள் உயர் நிலைக்குப் பெரும்பாடுபடுவது திராவிடர் கழகம்!

★

அந்தச் சாமிக்கு அரிசி பருப்பு அழுது வருவது நாம். அப்படியிருக்க நாம் அதைத் தொடக்கூடாதென்று அந்தப் பார்ப்பான் கூறுகிறானென்றால் அப்படிப்பட்ட இடத்திற்கு நாம் போகலாமா? அதற்குத் தேங்காய் பழம் படைக்கிறீர்களே, துணிமணி வாங்கித் தருகிறீர்களே. அதை அந்தக் குழவிக்கல்லா அநுபவிக்கிறது? குழவிக் கல்லால் சாப்பிட முடியுமா? சாப்பிட்டால் ஜீரணமாகி வெளிக்குப் போகிறதா? எல்லாவற்றையும் பார்ப்பான் தானே அநுபவிக்கிறான், பாடுபட்ட பணத்தை அப்படி விரயமாக்கலாமா நீங்கள்? கடவுள் என்றால் அது யோக்கியமாக, ஒழுக்கமாக பாரபட்சமின்றி நடந்து கொள்ளவேண்டாமா? பாடுபடும் நீங்கள் பட்டினி கிடக்க, படிக்க வசதியின்றித் தற்குறிகளாயிருக்க, ஏழைகளாக, கீழ் ஜாதி மக்களாக இருக்க, பாடுபடாத பார்ப்பனத்திகள் சோம்பேறிகளாக, அய். வி. எஸ். காரர்களின் மனைவிகளாக, பட்டாடை உடுத்தி மேனி மினுக்குடன் உயர்ஜாதி மக்களாக வாழ அநுமதிக்கும் கடவுளா உங்களுக்குக் கடவுள்?

## பாப்பாத்தி மொட்டையடிக்கிறாளா? பாப்பான் காவடி தூக்குகிறானா?

கடவுள்என்றால் கல், களிமண்,புல், பூண்டு, செடி, கொடி, கழுதை, குதிரை, சாணி, மூத்திரம், இத்தனையும் கடவுளா? கடவுள் என்றால் அறிவுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டாமா? திருப்பதிக்குப் போய் மொட்டையடித்துக் கொண்டு வருகிறீர்களே! சாமி மயிரா கேட்கிறது? எந்தப் பார்ப்பனத்தியாவது திருப்பதிக்குப்போய்மொட்டையடித்துக்கொண்டு வருகிறாளா? இப்போது தாலியறுத்தால்கூட அவர்கள் மொட்டை அடித்துக்கொள்வதில்லையே! மொட்டை அடிக்கப்படும் என்று தெரிந்தால் அதற்கு முன்பே வீட்டை விட்டு யாருடனாவது ஓடிவிடுகிறார்களே! அப்படி இருக்க உங்கள் மயிரைத்தானா சாமி கேட்கும்? உங்கள் கணவன்மாரைக் காவடி தூக்கிச் செல்ல அநுமதிக்கிறீர்களே. அது தகுமா? எந்தப் பார்ப்பானாவது பழனி ஆண்டவனுக்குக் காவடி தூக்கிச் செல்வதைப் பார்த்திருக்கிறீர்களா? அய்ந்து புருஷர்கள் போதாதென்று வேறு புருஷனையும் விரும்பிய துரௌபதியம்மாளைப் போய்க் கும்பிடுகிறீர்களே! அவளுக்கு மாவிளக்கு வைக்கிறீர்களே, உங்களுக்கு இன்னும் அதிகப்படியான புருஷர்கள் வேண்டுமென்று வரங்கேட்கவா, அந்தப்படி செய்கிறீர்கள்? திராவிடத் தாய்மார்களாகிய உங்களுக்கு அடுக்குமா இது?

## நீங்கள் இன்ப வாழ்வு வாழ......?

தாய்மார்களே! நீங்கள் எதையும் பகுத்தறிந்து பார்க்கவேண்டும். கல்லைக் கடவுளென்று நம்புவதையும் பார்ப்பானைக் கடவுள் அவதாரம் என்று நம்பி அவனுக்கு அரிசி பருப்பு அழுவதையும் அறவே விட்டொழிக்க வேண்டும். சாணி மூத்திரத்தைக் கலக்கிக் குடிப்பது மதம் அல்ல. மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பித்துக் கொடுப்பதுதான மதம் என்பதை, மனிதனை மனிதனாக மதித்து நடத்துவதுதான் மதம் என்பதை நீங்கள் உய்த்துணர வேண்டும். புராண சம்பந்தமான நாடகங்களுக்கோ சினிமாக்களுக்கோ, புண்ணிய க்ஷேத்திரங்கள் புண்ணிய தீர்த்தங்கள் என்பனவற்றிற்கோ நீங்கள் கட்டாயம் போகக்கூடாது. இவை யாவும் பார்ப்பனர்கள் உங்கள் காசைப் பறித்துச் சுகபோக வாழ்வு வாழ்வதற்கு வகுத்துக் கொண்ட வழிகள். நீங்களும் மேல்நாட்டுப்பெண்களைப் போல் சகல உரிமைகளும் பெற்று இன்ப வாழ்வு வாழவேண்டும். அதற்கு நீங்கள் ஆண்களைப் போல் படிக்க வேண்டும். உங்களுக்குச் சட்டத்தின் மூலம் பல உரிமைகள், சொத்துரிமை, விவாக ரத்து உரிமை ஆகிய உரிமைகள் வரக்காத்திருக்கின்றன. அவ்வுரிமைகளை அநுபவிக்க உங்களுக்குக் கல்வி அறிவு அவசியமாகும். நகைகளிலோ சேலைகளிலோ உங்களுக்குள்ள பிரியத்தை ஒழித்து விடுங்கள். இவற்றில் பிரியம் வைத்துக்கொண்டிருப்பீர்களானால் ஜவுளிக் கடையிலும் நகைக்கடையிலும் சேலை விளம்பரத்திற்காக அவ்வப்போது வெவ்வேறு சேலையுடுத்தி வெவ்வேறு நகை மாட்டி வெளியே நிறுத்தி வைக்கும் வெறும் பொம்மைகளாகத் தான் நீங்கள் ஆக நேரிடும்.

## பழிச்சொல்லுக்காளாகிப் படுமோசம் போகாதீர்!

ஆகவே அவ்விருப்பங்களை விட்டு கல்வியறிவில் விருப்பம் கொள்ளுங்கள். வீரத்தாய்மார்களாக ஆக ஆசைப்படுங்கள். உங்கள் நன்மைக்காகத் தான் பெரும்பாலும் திராவிடர் கழகம் இருந்து வருகிறது. நீங்கள் மாறினால் உங்கள் கணவன்மார்கள், மற்ற ஆண்கள் மாற்றம் அடைவது வெகு சுலபம். ஆண்கள் உங்களைத்தான் பிற்போக்காளிகள் என்று உங்கள்மீது பழி சுமத்தி வருகிறார்கள். "எனப்பா மூடநம்பிக்கைக் கிடமான இக்காரியங்களைச் செய்கிறாய்?" என்று ஒரு ஆணைப் பார்த்துக் கேட்டால், "நான் என்ன செய்யட்டும்? என் வீட்டில் ஒரு பெரிய சனியன் இருக்கிறது. எல்லாம் அதன் தொல்லைதான்," என்று கூறி விடுகிறான். அப்பழிச் சொல்லுக்கு ஆளாகாதீர்கள். எதிர்காலத்தில் இவள் இன்னாருடைய மனைவி என்று அழைக்கப்படமாட்டாது. இவர் இன்னாருடைய புருஷர் என்று அழைக்கப்படவேண்டும். அந்த நிலைக்கு உங்களைக் கொண்டுவர அநுதினமும் பாடுபட்டுவரும் திராவிடர் கழகத்தை நீங்கள் அனைவரும் ஆதரித்து வரவேண்டும். கடைசியாக உங்களை ஒன்று வேண்டிக்கொள்கிறேன்; உங்களை என்றென்றும் மடமையிலும் அடிமைத்தனத்திலும் ஆழ்த்திவைக்க நினைக்கும் மதங்களையோ, மதக் கர்த்தர்களையோ, மகான்களையோ ரிஷிகளையோ நம்பி நீங்கள் மோசம் போகாதீர்கள். மனித சக்திக்கு மேற்பட்ட சக்தி தன்னிடம் இருப்பதாக எவன் கூறினாலும் அவன் எவ்வளவுதான் உயர் நிலையிலிருந்தாலும் சரி, அது பித்தலாட்டம், மோச வார்த்தை, என்பதை உறுதியாக மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இந்நாட்டில் என் இந்த உலகிலே கூட எத்தனையோ மகான்கள், மகரிஷிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள் தோன்றியிருக்கிறார்கள். என்றாலும் இதுவரையாரும் உங்களுடைய இழிவைப்போக்கப் பாடுபட்டதாகக்காணப்படவில்லை. ஏசுகிருஸ்து தோன்றி அன்பு மதத்தைத் போதித்ததாக பைபிள் கூறுகிறது. அவருடைய சிஷ்யர்கள்தான் இன்று அணுக்குண்டு உற்பத்திக்கு முக்கிய காரணஸ்தராயிருந்து வருகிறார்கள். முகம்மது நபி சிஷ்யர்களும் ஹிந்துமத பாதுகாப்பாளர்களும் இன்று ஒருவரை ஒருவர் கொன்று கொள்கிறார்கள். காந்தியாரின் அகிம்சை அவரையே கொன்று விட்டது.

## கண்ணை மூடிப் பின்பற்றுங்கள்! கருஞ்சட்டையைப் பரப்புங்கள்!

ஆகவே இன்றைய மதங்கள் பயனற்றதாகப போய்விட்டன; அன்பையும், சத்தியத்தையும், வர்ணாச்சிரம தர்ம ஒழிப்பையும் அடிப்படையாக கொண்டு ஒரு புது மதத்தைக் காந்தியின் பேரால் துவக்குங்கள் என்று என்னால் கூறப்பட்ட ஆலோசனையும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாகிவிட்டது. ஆகவே தோழர்களே! தாய்மார்களே! நீங்களும் உங்கள் மக்களும் மனிதத் தன்மையோடு வாழவேண்டுமானால் உங்களுக்குள்ள ஒரேவழி திராவிடர் கழகத்தைக் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றி நடந்து வருவதுதான். திராவிட நாட்டில் எங்கெங்கும் கருப்புச் சட்டையைப் பரவச் செய்ய வேண்டியது தான்" என்று கூறி முடித்தார்.

# காலமும் கருத்தும்.

★

காலத்திற்கேற்றாற்போல் கருத்து மாறுபடுகிறது. கருத்து மாறுவதால் மக்கள் தங்கள் சூழ்நிலை, நடையுடை பாவனை ஆகியவைகளை மாற்றிக் கொள்கின்றார்கள். காலம் செல்லச் செல்ல கருத்து மாறுபடுவதால் தான், திருந்திய வாழ்க்கை திறம்பட படிப்படியே முன்னேற்ற மடைகின்றது.

வேட்டையாடின விலங்கின் தோல்களை ஆடையாகவும், மாமிசத்தை உணவாகவும் கொண்டு காட்டில் விலங்கினங்களுள் ஒன்றாகச் சுற்றித் திரிந்த மனிதன் இன்று எவ்வளவு தூரம் தன் கருத்தை மாற்றிக் கொண்டுள்ளான்?

ஒருவர்க்கொருவர் தங்கள் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்க—விலங்கினங்களைப் போல ஒலிக்குறி, முகக்குறி, கைக்குறிகளால் சைகைகள் செய்து—வாய் பேசுவதறியாது வாழ்ந்தமக்கள் இன்று எவ்வளவிற்குத் தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டுள்ளனர்.

கற்களால் செய்த கரடுமுரடானஆயுதங்களை உபயோகித்த அக்காலத்திற்கும், நவீன ஆயுதங்கள் நடமாடும் இக்காலத்திற்கும் எந்த அளவிற்குக் கருத்து மாறுபட்டுள்ளது?

அம்மன் படிமத்தின் அருகில் நின்று, அர்ச்சனைகளால் ஆரவாரம் செய்து—'ஆற்றாயோ என் துயரம்' என அந்தாதி பாடி, 'பதிவிரதா பத்தினியே' என்று பதிகம்பாடி, 'பாரெங்கும் பரபுபவளே' என்று பாசுரம்பாடி பக்திப் பரவசத்திலாழ்ந்து காலம் மலையேறி — 'நீயுண்டாக்கிய கோவிலில்'—'அர்ச்சனைக்கு அணா வாங்கி ஆனந்த தரிசனம் செய்யச் சொல்லும் உன் ஆலயத்தில்!—'கட்டணம் வாங்கி, கடவுளுக்குக் கனகாபிஷேகம் செய்யும் கயமைத்தனம் நிரம்பிய உன் ஆலயத்தில்'—எது சாமி (?) என்னும் வினாக் குறியை அர்ச்சகர்கள் முதல் ஆள்வோர்கள் வரை, மனதில் பதியச் செய்யும் பகுத்தறிவாளர்களால் அயலாரின் வஞ்சனையை அறிந்தபின்—அறியாமைக் கோட்டையின் அஸ்திவாரத்தைத் தகர்த்தெறிய காலத்திற் கேற்றாற்போல், பகுத்தறிவிற்கொத்தாற்போல் தங்கள் கருத்தை மாற்றிக் கொண்டார்களன்றோ?

பகவத் கீதாவைப் பயபக்தியுடன் படித்து, புராணங்களின் பக்திப் பரவசங்களில் மூழ்கித் திளைத்து—அவைகள் காட்டும் நெறிமுறையில்பிறழாமல் தன்வாழ்வை நடாத்திவரும் ஓமாந்தூரார், 'பழைமை விரும்பிதான்' புதுமை விரும்பி'யல்ல என்றால் அவர் கோகரத்திற்குக் காவடி தூக்க, புஷ்பக விமானத்தையோ, கட்டை வண்டியையோ உபயோகிக்கவில்லையே!

பழைமையை மாய்த்துப் புதிய ஆய்வுலகில், ஆய்வின் அருளினால், சிந்தனையின் சிறப்பினால் சிதறிய வான ஊர்தியிலன்றோ செல்கின்றார்? பின் எவ்வாறு ஓமாந்தூராரைத் தன் கருத்தைக் காலத்திற்கேற்றாற்போல் மாற்றிக் கொள்ளாதவர் என்று குறை கூறலாம்?

உலகத்தில் உயிருடன் நடமாடும் மாந்தருள் காலத்திற்குகந்தாற்போல் கருத்தை மாற்றிக் கொள்ளாதவர் ஒருவரேனும் இல்லையென்பது திண்ணம்.

உலகத்தின் கோடியில்—நாகரீக மக்களைக் காணாத இடத்தில் — வசிக்கும் 'எஸ்கிமோக்கள்' கூட விடிந்தால் வீட்டைச் சூழ்ந்திருக்கும் பனியினைப் போக்க 'சோடிய ஹரிதகி கஜத்தை' யல்லவோ உபயோகிக்கின்றனர்! தங்கள் சீதோஷ்ண நிலைக்குகந்த உடுப்புக்கு அமெரிக்காவிலன்றோ 'ஆர்டர்' கொடுக்கின்றனர்! நாகரீக மக்களைக் காணாத உலகத்தின் கோடியில் வாழும் மக்களே இவ்வாறென்றால், வேறொருவர் தங்கள் கருத்தை காலத்திற்கேற்றாற்போல் மாற்றிக்கொள்ளாமலிருப்பரோ? இருக்க முடியுமோ?

எனவே உலகமக்கள் எல்லோரும் தங்களை அறிந்தோ அறியாமலோ காலத்திற்குகந்தாற் போல் கருத்தை மாற்றிக் கொள்கின்றனர்.

'எல்லா விஷயங்களிலும் மாறிவிட்டீர்கள். ஆனால் சமூகம், அறியாமையும், முத்தும், மணியும், மரகதமும் முடங்கிக் கிடக்கும் ஆலயம், புராணம் இவைகளிலும் உங்கள் கருத்தை காலத்திற்குகந்தாற்போல் மாற்றிக் கொள்ளுங்கள்' என்றால் ஏனய்யா சீறிவிழுகின்றீர்கள்?

சாஸ்திரிகள் சம்மர்கிராப் வைத்துக் கொண்டு சைக்கிளில் செல்வதை நீங்கள் பார்க்கவில்லையா? சூட்டும், கோட்டும் போட்டுக் கொண்டு, வாயிலிருந்து வெள்ளிப்புகை மண்டலம் வெளிச் செல்ல, அர்ச்சகர்கள் பையன் ஆபீஸுக்குச் செல்வதை நீங்கள் பார்க்கவில்லையா? அவர்களும் தங்களுக்குச் சாதகமான சில விஷயங்களில் மாத்திரம் கருத்தைக் காலத்திற்குகந்தாற் போல் மாற்றிக் கொண்டுள்ளனர்.

'தர்ப்பைப் புல்லேந்தும் கை வில்லும், வாளும் ஏந்துமென்றால்' பழைமையை மாய்ப்பதில் அவர்கள் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றனர் எனலாம். ஆனால் 'ஜாதி, மத, உயர்வு, தாழ்வுகளைச் சரி செய்வதென்பதுமுடியாததொன்று. எவ்வாறுஆண், பெண் படைப்போ அதைப் போன்று இதுவும் மாற்றமுடியாத சிருஷ்டி' என்று நாகரீகத்தின் நவயுகச் சின்னங்களிலொன்றான ஒலி பெருக்கிக் கருவியின் முன்நின்று பேசுவரே யானால் அவர் தம் பிற்போக்கை என்னென்று வினாவுவது? பகுத்தறிவினால் பழைமையை மாய்க்கும் இந்நாளில் அத்தகையோர் வாழத்தகுந்தவரா?


அன்னியர் ஆட்சியால்—அடிமை வாழ்வால்—ஆனந்த வாழ்வறியாத மக்கள்—ஆனந்த வாழ்வு வாழ—நாமிருக்கும் நாடு நமதென்றுபாட, தங்களின் அடிமைத் தளையை அறுத்தெறிய முன் வந்தது ஏன்? அதுவரையில்அடிமையாய்—விழிப்புறாமல் இருந்த அவர்கள்—அயல் நாடுகள் அடிமை வாழ்வினின்றும் அகலுவது கண்டு—ஆவல் கொண்டு அல்லது அவர்கள் தலைவர்களால் அவர்களின் அடிமையான அவல நிலையையுணர்ந்து—விடுதலை கேட்கின்றார்கள். ஏன்? அவர்கள் கருத்து—இத்தனை நாள் அடிமையாய் வாழ்ந்து வந்தவர்களின் கருத்து—காலத்திற்கேற்றாற்போல்—அடிமை யென்னும் அவலச் சொல்லை யொழிக்க—விடுதலை யென்னும் போர்முரசை எழுப்பி ஆர்வத்துடன் முன் வருகின்றார்கள்.

மக்கள் தாங்களாக விடுதலையை விரும்பா விடில் வெற்றி முழக்கத்துடன் கிளம்புகின்றனர் வீரர்கள். அமெரிக்காவில் வாஷிங்டன், ரஷ்யாவில் லெனின், துருக்கியில் கெமால், சீனாவில் ஸன்யாட்சென், திராவிடத்தில் பெரியார் ஆகியவர்கள் தோன்றுகின்றார்கள்—மக்களை விழிப்படையச் செய்கின்றார்கள்—அவர்கள்கருத்தைக் காலத்திற்கேற்றாற்போல் மாற்றுகின்றார்கள்—வெற்றிமாலை சூடுகின்றார்கள்.

மக்களின் மங்கா மூப்பான மூடக்கொள்கை யெனும் முடக்குவாதத்தைப் போக்குவதற்காகப் பாடுபட்டுப் பரிசுகள் பெற்ற பகுத்தறிவாளர்கள் பலர். அக்காலத்தில் அவர்களை எதிர்த்த அதே நாடு இப்பொழுது அவர்களைப் போற்றும் அளவிற்குக் கருத்துமாறி யுள்ளது.

ஆனால் நாம்?............கடவுளருள் பெற்றவனென்று ஒருவனைப் போற்றுகின்றோம்; ஒரு சிலரின் கால்களினைக் கழுவிக் குடிக்கின்றோம்; திருப்பதி சென்று மொட்டையடிக்கின்றோம்; திருவரங்கம் சென்று சொர்க்க வாசல் நுழையும் பொழுது பக்கத்தில் சொருகியிருந்த மணிபர்ஸைப் பறிகொடுத்து விடுகின்றோம்! ஆண்களை ஆசை நாயகிகள் வீட்டிற்குப் போகும்படி போதிக்கும் மட்டையடித் திருநாளைப் பார்க்க மனைமக்கள் சகிதமாய்ச் செல்லுகின்றோம்! இன்னும் என்னென்னவோ செய்கின்றோம். இது தகுமா?

பகுத்தறிவுப் பாசறையில் இவை




## தமிழ்த் தொண்டன்.

திங்கள் வெளியீடு.
ஆசிரியர் அ. ச.ஞானசம்பந்தன்எம்.ஏ.
130. இராசவீதி, காஞ்சீபுரம்.
தனிப்பிரதி 0-4-0 ஆண்டுக்குரூ.3-0-0

குறைந்த கட்டணம் பெற்று, கூடிய செலவு செய்து மாணவர்க்குச் சைவ சமய அறிவையும் கல்வியறிவையும் புகட்டும், சடையப்ப வள்ளலார் மாணவர் இல்லத்தின் சார்பாக, மாணவர் இல்ல வளர்ச்சிக்காக வெளிவரும் இத் திங்கள் இதழில் பல புலவர் பெருமக்களின் கட்டுரைகளோடு, சில புதிய முறைகளும் காணப்படுகின்றன. திருத் தொண்டர் புராணத்தில் ]பெரிய புராணத்தில்] திளைத்து, தொண்டின் நுட்பத்தை இளமையிலேயே செவ்வி தின் உணர்ந்து அதுவே நெறி என்று கடைப்பிடித்தொழுகும் இளைஞர் எனத் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. ஆசிரியரை அறிமுகப்படுத்துகிறார்.

## கிளர்ச்சி.

மாதம் இருமுறை.
ஆசிரியர் என். இராமமூர்த்தி.
தனிப்பிரதி 0-2-6. ஆண்டுக்கு 4-0-0.
வேலூர்.

ஹோட்டல் தொழிலாளர் பத்திரிக்கை என்ற பெயர் தாங்கி சோஷியலிஸ்ட் கட்சிக்கு மெருகு கொடுக்க முன்வந்திருப்பது இந்தக் கிளர்ச்சி.

## இனமுரசு.

மாதவெளியீடு.
ஆசிரியர் டி. ஜி. கிஷ்ணசாமி.
தனிஇதழ் 0-4-0. ஆண்டுக்கு 3-0-0.
17. சோமுசெட்டி 2வது சந்து
ராயபுரம், சென்னை.

திராவிட இனத்தின் இழிவு நீக்குப் போருக்கு முரசு கொட்டி, திராவிடர்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்ல முன்வந்திருப்பது இந்த இனமுரசு. கருத்துக்கு அறிவு விருந்தும், கண்ணுக்கு அழகு விருந்தும் அளிக்கிறது. பக்கங்கள் அதிகரிக்க வேண்டும்! நிலைத்து நின்று முரசு கொட்டவேண்டும்! நீங்கள் வாங்கி ஆதரிக்க வேண்டும்!

## ஒளி.

மாதம் இருமுறை.
ஆசிரியர் கா. மு. ஷெரீப்.
தனிஇதழ் 0-2-0. ஆண்டுக்கு 3-0-0.
திருவாரூர்.

தமிழ்நாடு சுயநிர்ணய உரிமையுடன் தனியாகப் பிரிந்தே தீர வேண்டும். அதில் நாம் சோஷலிஸக் குடிஅரசை அமைத்து இந்திய சமஷ்டியில் இணைத்து வாழ வழிகோல வேண்டும்..............தமிழ் மக்களின் உரிமைக்கு சாதி—மத வித்தியாசமின்றி உழைக்கும் இந்த ஒளி என்கிறார் இதன் ஆசிரியர்.

---

களைக் கருவறுக்க அதோ படைகள் திரட்டுகின்றார் வெண்தாடிக்காரர். வாருங்கள்! தோழர்களே, வந்து அணி வகுத்து நில்லுங்கள்!! அதோ புரட்சிக் கவிஞர் முரசறைகின்றார் அவருக்கே உரித்தான செந்தமிழ்க் காவிய நடையில். அதோ! தளபதிகள்! தலைவர்க்குப் பின் வீராங்கனைகளின் வெற்றிக் கோஷங்களுடன் செல்லுகின்றார்கள்.

அதோ அப்படை செல்லுகின்றது! பழைமைவிரும்பிகளிடம், கருத்தைக் காலத்திற்குகந்தாற்போல் மாற்றாதவர்களிடம். வாருங்கள் நாமும் செல்வோம்!

"டி. எஸ். வடிவேலு"

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டது என்று எண்ணுகிறீர்கள் போலும்! தோழியர்களே! விதவைகளும் நமது சகோதரிகளல்லவா? (ஒருதாய் வயிற்றில் பிறக்காவிட்டாலும் ஒரே இனத்தில் பிறந்தவர்களல்லவா?) அவர்கள் அடிமை வாழ்வை அறுத்தெறிந்து, அவர்கள் அவல நிலை ஒழிய வேண்டாமா? அவர்களுக்கு நல்ல நிலையை அளிப்பது நமது கடமை அல்லவா? இதை இனிமேலாவது உணர்ந்து கூடியவரை திராவிட விதவைகள் நல்ல நிலை அடைய நாம் தீவிரமாக உழைக்க வேண்டும். ஒருசில இடங்களில் விதவைத் திருமணம் நடந்து கொண்டிருந்தாலும்கூட, அதனால் எல்லா விதவைகளின் குறையும் தீர்ந்துவிட்டது என்று எண்ணுவது பலனை அளிக்காது. நாம் அவர்களுக்கென்று கொஞ்ச நேரத்தைச் செலவிட்டால்தான் நன்மை அடையமுடியும்.

உள்ள நிலையும் செல்வ நிலையும் இடங்கொடுக்கும் நமது திராவிடத் தோழியர்கள், திராவிட விதவைக் காப்பு விடுதிகள் ஏற்படுத்த வேண்டும்.

யார் எக்கேடு கெட்டால் என்ன? நம்வரைக்கும் நன்றாக இருந்தால் சரிதானே! என்ற சுயநலஎண்ணம் நம்மைத் தடுக்கும். அதற்கெல்லாம் அடிபணியாமல் விதவைக் காப்பு விடுதி ஏற்படுத்தியே தீரவேண்டும். விடுதியில் தையல் பின்னல் கற்றுக் கொள்ள வசதியும், படிக்காத பெண்களாயிருந்தால் அவர்களுக்குக் கல்வி போதிக்கவும், ஏழை விதவைகளுக்குச் சம்பளம் இல்லாமல் இனாமாகவும், பணக்கார விதவைகளாயின் சிறிது சம்பளம் நிர்ணயித்தும் வசதி செய்ய வேண்டும். விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள தோழியர் ஒவ்வொருவரும் ஒரு சிறந்த டாக்டராகவும், ஒரு சிறந்த உபாத்தியாயினியாகவும், ஒரு எஞ்சினீயராகவும்,விஞ்ஞானநிபுணராகவும், நாட்டுக்குழைக்கும் நாரீமணியாகவும், ஓவியத்தின் கரைகண்ட சிற்பியாகவும் ஆக்கப்படல் வேண்டும். இவைகளெல்லாம் செய்ய உங்கள் பொருளாதாரம் இடம் கொடுக்காவிட்டால், பெரும்பாலான திராவிடப் பெண்களிடையே பணம் வசூலித்துத்தான் செய்ய வேண்டும். இந்தப் பணிக்காக நமது இனத்தோழர்களும், தோழியர்களும் ஏராளமாகப் பணஉதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை முழுதும் இருக்கிறது. ஆகவே வசதியுள்ள திராவிடப் பெண்கள், இந்த அரும்பெரும் பணியை செய்து, வீட்டின் நலிவுக்குக்காரணம் விதவைகளே என்ற நிலையைப்போக்கி, விதவைகள், நாட்டின் களங்கம்போக்கும் மாணிக்கங்கள் என்ற நிலை பிறக்கும்படி செய்ய அயராது உழைக்க வேண்டும். இஷ்டப்பட்ட விதவைகள் மறுமணம்செய்து கொள்ளவும், மற்றவர்கள் அவரவர்கள் துறையில் திறம்படக் கவனம் செலுத்தி முன்னேறவும், விடுதியின் முக்கிய நோக்கமாக, உதவியாக இருக்க வேண்டும். கூடியவரை விதவைகள் மறுமணம் செய்து கொள்ளாமல் நாட்டிற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டு மென்பதே என் ஆசை. ஏன்? எல்லா விதவைகளுமே வாழ்க்கையில் ஏதாவது ஒரு துறையில் இறங்கி நிம்மதியாகக் காலங்கழிக்கத்தான் எண்ணுவார்கள்! ஆகவே, அவர்களின் அவல நிலையை போக்கி, அடிமை வாழ்வை அறுத்தெறிய, வசதியுள்ள திராவிடப் பெண்கள் முன்வர வேண்டுமென்று மிக ஆவலோடு அழைக்கிறேன். வருகிறீர்களா?

---

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE